# உறவே நீ பேசு

## புனித வளனாரின் பிரான்சிஸ்கு சபை

மார்ச் 2026 உறவு 80



# SAINT JOSEPH

PATRON SAINT OF OUR CONGREGATION
PRAY FOR US

FSJ செய்தி மலர்

# அன்பு சகோதரிகளே!

உங்கள் அனைவருக்கும் நம் சபை பாதுகாவலர் புனித சூசையப்பரின் பெயரால் வாழ்த்துக்களையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் தந்தை தூய அசிசி பிரான்சிஸ்ன் 800–வது விண்ணக பிறப்பு யூபிலி ஆண்டின் இரட்டிப்பு மகிழ்ச்சியும், வாழ்த்துக்களும், செபங்களும்.

மேலும் அருளின் காலமாம் தவக்காலத்தில் இருக்கும் நாம், செபம், தவம், தர்ம செயல்களோடு இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றி அவருக்கு ஏற்றவை பற்றியே சிந்தித்து, வாழ்வில் வரும் சிலுவைகளை சுமந்து கொண்டு, தாழ்ச்சி உள்ளவர்களாக பணிபுரிய நமக்கு இத்தவக்காலம் அழைப்பு விடுக்கிறது. அழைப்பை விருப்புடன் ஏற்போம்.

மார்ச் மாதம் என்றாலே பல்வேறு சிந்தனைகளையும்
செயல்பாடுகளையும் நாம் மேற்கொள்ள நம்மை தூண்டும்.

“MARCH” என்ற சொல்லுக்கு அகராதியில் மூன்று பொருள் கொடுக்கப்பட்டுள்ளது.

1. ஆங்கில மாதத்தில் மூன்றாவது
2. படைகளின் அணிவகுப்பு
3. ஒழுங்குபட்ட நடையுடன் செல்.



இந்த மூன்றாவது பொருளை நம் வாழ்வின் சிந்தனையாக எடுத்துக் கொள்வோம். படை வீரர்களின் அணிவகுப்பு ஒழுங்குபட்ட நடையுடன் இருக்கும் போது, நாம் ரசிக்கிறோம், வியக்கிறோம், கரஒலி எழுப்புகிறோம். ஒழுங்கு சிறிது குலைந்தாலும் அணிவகுப்பு சிதைந்து விடும். பார்ப்பவர்கள் பரிகசிப்பார்கள். ஒவ்வொரு வாழ்வும் அர்த்தம் பெற, அழகுற சில ஒழுங்கு முறைகளை மேற்கொள்கிறோம். அல்லது ஒருவரின் வாழ்வு முறைகளை பின்பற்றுகிறோம். துறவிகளாகிய அதிலும் FSJ சகோதரிகளாகிய நமக்கு தந்தை பிரான்சிஸ் மற்றும் புனித வளனார் இவர்களின் வாழ்வு அடிப்படை பாடமாக உள்ளது. இம்மாதம் புனித வளனாரின் விழாவை சிறப்பிக்கும் நேரத்தில் அவரின் வாழ்வு பற்றி சிந்திப்போம்.

நற்செய்தியில் மிக குறைவாக குறிப்பிடப்படுபவர். எங்கேயும் அவர் பேசியதாக எழுதப்படவில்லை. கனவுகளை அமைதியாக ஏற்று, கடவுள் திருவுளம் என கட்டுப்பட்டு, ஒரு ஒழுங்குகிரமத்திற்குள் தம்மை உட்படுத்திக்கொண்டவர். அதனால் அவருக்கு கிடைத்த பெயர் நீதிமான்.

இன்று திருச்சபையில் சூசையப்பர் பல துறைகளுக்கு பாதுகாவலாய் இருக்கிறார்.

- ☞ திருச்சபையின் பாதுகாவலர்
- ☞ துறவிகளின் பாதுகாவலர்
- ☞ கல்விக்கு பாதுகாவலர்
- ☞ குடும்பங்களுக்கு பாதுகாவலர்
- ☞ நோயாளிகளுக்கு பாதுகாவலர்
- ☞ நன் மரணத்திற்கு பாதுகாவலர்
- ☞ தொழிலாளர்களுக்கு பாதுகாவலர்
- ☞ துன்பப்படுபவருக்கு பாதுகாவலர்

இத்தனை துறைகளையும் இவர் நிர்வகிக்க இவரிடம் இருந்த கல்வித் தகுதி, திறமை, பட்டம், பதவி என்ன என்று யோசித்தால் ஒன்றும் இல்லை. ஆனால் ஒன்று மட்டும் உறுதி. அதுதான் அமைதி. சத்தம் இல்லாமல் இந்த உலகில் பல சாதனைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒரு பக்கம் ஆரவாரமும், சத்தமும், குழப்பமும், அவசரமும் இருப்பதை பார்க்கிறோம். மறுபக்கம் அமைதியும், ஆற்றலும், நிதானமும், நிம்மதியும் இருப்பதை பார்க்கிறோம். எது வலுவானது? சிந்திக்க ஒரு சிறுகதை

சூரியனும் காற்றும் சந்தித்தன. தங்களுக்குள் யார் பலசாலி என்ற வாக்குவாதம் அவர்களிடையே எழுந்தது. காற்று. சூரியனைப் பார்த்து "நான்தான் பலசாலி! என்னைப் பார்த்து மக்கள் பயப்படுகிறார்கள். புயலாக நான் வந்தால் மரங்கள் கட்டடங்கள் எல்லாவற்றையும் தரைமட்டமாக்குவேன்" என்று தனது பெருமைகளை எடுத்துவிட்டது.

"ஏன் வீணாகப் பேசிக்கொண்டிருக்கிறாய்? நமக்குள் ஒரு போட்டி வைப்போம். யார் பலசாலி என்று அப்போது புரியும்" என்றது சூரியன்.

"என்ன போட்டி? என்று வரிந்து கட்டியது காற்று. அதோ அந்த பாலைவனத்தில் ஒரு மனிதன் நடந்து போய்க்கொண்டிருக்கிறான். அவன் போட்டிருக்கிற சட்டையை நம்மில் யார் கழற்றி விடுகிறோமோ அவர்தான் பலசாலி" என்று போட்டியை அறிவித்தது சூரியன்.

"ப்பூ.. இவ்வளவு தானா? இப்போது பார் என் பலத்தை" என்று காற்று அம்மனிதனை நோக்கி பலமாக வீசத்தொடங்கியது.

திடீரென காற்று வேகமாக வீசத் தொடங்கியதை உணர்ந்த அந்த மனிதன் தனது ஆடைகளைப் பத்திரமாகப் பிடித்துக் கொண்டான். அவை பறந்து விடாமலிருக்கக் கீழே உட்கார்ந்து பாதுகாப்பாய்த் தன்னைக் குறுக்கிக் கொண்டான்.

காற்று விடவில்லை. பலம் கொண்டமட்டும் வீசிப் பார்த்தது. சுற்றிச் சுற்றி வீசியது. சுழற்றிச் சுழற்றி வீசியது. எவ்வளவு போராடியும் அவனது சட்டையைக் கழற்ற முடியவில்லை. கடைசியில் சோர்ந்து ஒதுங்கி நின்றது. இப்போது சூரியன் முறை. சூரியன் மெல்ல மேலெழும்பி வந்தது. அமைதியாக தனது வெப்பத்தை உற்பத்தி செய்தது.

அந்த மனிதன் காற்று நின்றவுடன் மீண்டும் தனது பயணத்தைத் தொடர்ந்தான். வெயில் அதிகமானதால் அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. ஐந்து நிமிடத்தில் அவனாகவே, தன் சட்டையைக் கழற்றி, கையில் வைத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினான்.

காற்று தன் தோல்வியை ஒப்புக்கொண்டது காற்றைப்போல அவசரப்படுகிறவர்கள் சத்தங்களோடு வாழ்வதுதான் வாழ்க்கை என்று நினைக்கிறார்கள் சூரியனைப் போல் அமைதியாக ஆற்றலோடு, நிதானத்தோடு தங்கள் கடமைகளை நேரம் தவறாமல் செய்கிறவர்கள் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வேலை பளு, உறவு பிரச்சனை, நோய், பணியில் பிரச்சனை, குழுமத்தில் பிரச்சனை என்று குழப்பங்களும், சத்தங்களும், ஆரவாரங்களும், அமைதியற்ற தன்மையும், அடுக்கடுக்காய் நம்மை அழுத்தலாம். இந்நிலையில் தன்னிலை மறந்து ஒழுங்கற்ற விதத்தில் காற்றைப் போல் முட்டி மோதி, விழுந்து, எழுந்து நாம் வாழும் குழுமத்தையும், பணிதளத்தையும், அமைதியற்ற நிலைக்கு உட்படுத்துகிறோமா? சூரியனைப் போல் அமைதியாக அனுபவங்களை கிரகித்துக் கொண்டு சிந்தித்து புனித வளனாரை போல் செயல்படுகிறோமா? அமைதியான வாழ்க்கை, அழகான வாழ்க்கை, ஆற்றல் மிக்க வாழ்க்கை. அமைதியைப் பெற சுமைகளை இறக்க வேண்டும். தாழ்ச்சியான மனநிலை வேண்டும், இறைதிருவுளத்திற்கு கீழ்படிய வேண்டும். பசுமையான நினைவுகளால் நம் மனதை நிரப்ப வேண்டும். அமைதி இருக்கிற இடத்தில் ஆழம் இருக்கிறது. ஆற்றல் இருக்கிறது. நிம்மதி இருக்கிறது. நம் வாழ்வு அமைதியும், ஆற்றலும், நிம்மதியும் பெற நம்மிடம் உள்ள பகை, கோபம், பழிவாங்கும் எண்ணம், தற்பெருமை, சுயவிருப்பம், புறணி பேசுதல், புறக்கணித்தல் போன்ற அமைதியைக் குலைக்கும் எண்ணங்களை களைந்து அன்பு, சமாதானம், ஒற்றுமை, தாழ்ச்சி, பிறர் நலம், ஏற்றுக் கொள்ளுதல் போன்ற அமைதியை கொடுக்கும் பண்புகளை புனித வளனாரிடம் இருந்து நாம் பெற்றுக்கொள்வோம். நம் அர்ப்பண வாழ்வை அர்த்தம் பெறச் செய்வோம்.

என்றும் பிரான்சீசிய உறவில்
சகோ. M. **ஆரோக்கியம்** வ.பி.ச.
சபைத் தலைமைச்சகோதரி

SUPERIOR GENERAL
FRANCISCAN SISTERS
OF ST. JOSEPH

FSJ Generalate, Bishop John Aelen Illam, Magazine Road, St. Thomas Mount, Chennai - 600 016. Tamilnadu.
Phone : 2231 2876, 2234 1510 E-mail : fsjaelen1887@gmail.com

# SUPERIOR GENERAL PROGRAMME

## MARCH 2026

| | | |
|---|---|---|
| 01.03.2026 - 05.03.2026 | - | Revised Constitution Submission - Rome |
| 06.03.2026 - 10.03.2026 | - | Roncello - Canonical Visit |
| 11.03.2026 - 13.03.2026 | - | Italy Community Sisters Pilgrimage to Assisi |
| 14.03.2026 - 18.03.2026 | - | Germany – New Community - Preparatory Work |
| 20.03.2026 - 24.03.2026 | - | Edolo - Canonical Visit |
| 25.03.2026 - 30.03.2026 | - | Vaprio - Canonical Visit |

# FROM THE GENERALATE

FEBRUARY 2026

**07.02.2026:** The Inauguration of the renovated St. Joseph's Matriculation Higher Secondary School and St. Joseph's Convent, Ennore was held on 7 February 2026 at 6.30 a.m. Rev. Mother Arockiam, Superior General, Rev. Fr. Prem Raj, Parish Priest of St. Joseph's Church, Ennore, Provincial Superior Sr. Mercy Fathima, and other Sisters graced the occasion.The inauguration was marked by the traditional ribbon-cutting by Rev. Mother Arockiam, followed by the blessing of the premises with holy water. A lamp-lighting ceremony was held at the convent, with the participation of the Superior General, Fr. Prem Raj, Sr. Mercy Fathima, Rev. Sr. Maria Stella Sandra, Principal, and Engineer Mr. Arockia Dass.

**12.02.2026:** The foundation stone for the building at Pulicat was blessed by Rev. Fr. Rosario Varghese, Parish Priest of Our Lady of Glory Shrine, Pulicat. The ceremony was graced by Mr. Jac Braat, Chairman of the Thomas Foundation; Mr. Marian Jespers, Sr. Prudentia, Coordinator of the Pulicat Project, Sr. Arul Mary, Coordinator of the Thomas Foundation, Sr. Sutha, Supervisor and the Sisters of the Pulicat Community.

**14.02.2026:** The Jubilee Celebration was a joyous and grace-filled occasion of thanksgiving to God for the gift of vocation and faithful service. On this blessed occasion, 10 Golden Jubilarians marking 50 years of consecrated life and 8 Silver Jubilarians celebrating 25 years of dedicated service renewed their commitment to the Lord. The solemn Thanksgiving Mass was celebrated by Most Rev. Lourdu Anandam, Bishop of Sivagangai, in the presence of nearly 65 priests, numerous religious, parents, relatives, and friends. The celebration concluded with a festive dinner, where all gathered shared moments of fellowship and gratitude, rejoicing in the blessings of many fruitful years of service in the Lord's vineyard.

# FROM THE GENERALATE

FEBRUARY 2026

**15.02.2026 - 17.02.2026:** The General Commissions Meeting focussed on formulating a three-year strategic plan aimed at ensuring responsible and effective implementation of the Congregation's mission and future goals. During the meeting, Our Superior General Mother Arockiam reflected on their specific roles and responsibilities, emphasizing accountability, collaboration, and timely execution of assigned tasks. Clear objectives were outlined for each commission, with practical steps and measurable outcomes to guide progress over the next three years. The Meetings were scheduled as follows and the General councilors chaired the sessions of their respective commissions.

| | | |
|---|---|---|
| 15.02.2026 | FN | Sr. Arul Mary |
| 15.02.2026 | AN | Sr. Christhu Rani |
| 16.02.2026 | FN | Sr. K.A. Susaimary |
| 16.02.2026 | AN | Sr. Mary Jenova |
| 17.02.2026 | FN | Sr. P.S.Celia |

**20.02.206 – 28.02.2026:** Mother General, Rev. Sr. Arockiam, has undertaken a visit to Italy to conduct the canonical visitation of the Italian communities, to finalize the arrangements for the new missions to be opened in Germany, to submit the revised Constitutions to the Holy See for approval, and to advance the cause for the canonization of our Founder, Archbishop John Aelen.

**Sr. Shaila FSJ**
General Secretary

# ST. JOSEPH'S PROVINCE

FSJ Provincialate, Assisi Bhavan, Uthamanallur Village,
Acharapakkam - 603 301. Kanchipuram Dist.

# PROVINCIAL SUPERIOR PROGRAMME

## MARCH 2026

| | | |
|---|---|---|
| 02.03.2026 - 06.03.2026 | - | IHM School Avadi |
| 07.03.2026 & 08.03.2026 | - | Acharapakkam |
| 09.03.2026 - 13.03.2026 | - | IHM School Avadi |
| 14.03.2026 & 15.03.2026 | - | Acharapakkam |
| 16.03.2026 - 18.03.2026 | - | IHM School Avadi |
| 19.03.2026 | - | Acharapakkam |
| 20.03.2026 | - | IHM School Avadi |
| 21.03.2026 | - | Acharapakkam |
| 22.03.2026 | - | Province Feast |
| 23.03.2026 to 27.03.2026 | - | IHM School Avadi |
| 28.03.2026 & 29.03.2026 | - | Acharapakkam |
| 30.03.2026 &. 31.03.2026 | - | IHM. School. Avadi |

*That They all May be One. Jn 17:21*

# BISHOP JOHN AELEN PROVINCE

FSJ Provincialate, 63/1, 2nd Street, Alpha Nagar, Karumandapam, Trichy - 620 001.
Mobile: 94861 59689 / E-mail: tryprofsj@yahoo.com

## PROVINCIAL SUPERIOR PROGRAMME

### MARCH 2026

| | | |
|---|---|---|
| 03.03.2026 | - | Assisi Illam, Palayamkottai Repair Work Visitation |
| 04.03.2026 | - | Assisi Illam Visitation - Pandarakulam |
| 06.03.2026 | - | St. Theresa's Nursery and Primary School Visitation, Marianathapurm Dindigul. |
| 07.03.2026 | - | International Women's Day Celebration at FSJ Provincialate - Trichy |
| 11.03.2026 | - | St.Joseph's Convent Visitation - Manavalanallur |
| 18.03.2026 | - | St.Joseph's Convent Visitation - Alwarpet |
| 19.03.2026 | - | St.Joseph 's Feast Celebration |
| 20.03.2026 | - | Epheus Home Visitation - Coonoor |
| 25.03.2026 | - | St. Theresa's Primary School Retirement Function - Marianathapurm, Dindigul |
| 26.03.2026 | - | College Day Celebration, Singampunari |
| 28.03.2026 | - | Annai Velankanni N/P School graduation Singampunari |

ST. FRANCIS OF ASSISI PROVINCE
FSJ Provincialate, Assisi Bhavan, Dharera P.O. Etmadpur, Agra Dt - 283 202. U.P.
Phone: 073516 78464 / Email: provincialatefsj@gmail.com

# PROVINCIAL SUPERIOR PROGRAMME

## MARCH 2026

| | | |
|---|---|---|
| 02.03.2026 | - | Boundary wall work starts at new land |
| 05.03.2026 | - | Superiors Meeting (Online) |
| 09.03.2026 | - | Women's Day Celebration at Provincialate Etmadpur |
| 10.03.2026 -13.03.2026 | - | Desk work |
| 14.03.2016 | - | Monthly Recollection |
| 17.03.2026 - 19.03.2026 | - | Chennai |
| 20.03.2026 - 21.03.2026 | - | Press Work |
| 25.03.2026 - 26.03.2026 | - | Lenten input Sessions for Sisters Fr. John Segar |
| 28.03.2026 - 30.03.2026 | - | Community Visitation. |

# ST. MARY'S VICE-PROVINCE

Portiuncula Convent, No.5, D.R.R.Street, Avadi, Chennai – 600 054.
Mobile No: +91 81224 02357 | E Mail: fsjstmarysprovince@gmail.com

## VICE-PROVINCIAL SUPERIOR PROGRAMME

### MARCH 2026

| | | |
|---|---|---|
| 04.03.2026 | - | School of Nursing, St. Thomas hospital- Visit |
| 14.03.2026 | - | St. Joseph's Convent, MM Nagar- Visit |
| 19.03.2026 | - | St. Joseph Feast, Mugalivakkam |
| 21.03.2026 | - | Sembarambakkam- Visit |
| 28.03.2026 | - | Superior's Meeting,<br>St. Mary's Vice Provincialate, Avadi |
| 29.03.2026 | - | Palm Sunday |

MARCH 2026

*Message of the Holy Father Leo XIV for Lent 2026*

# Listening and Fasting: Lent as a Time of Conversion



Dear brothers and sisters,

Lent is a time in which the Church, guided by a sense of maternal care, invites us to place the mystery of God back in the center of our lives, in order to find renewal in our faith and keep our hearts from being consumed by the anxieties and distractions of daily life.

Every path towards conversion begins by allowing the word of God to touch our hearts and welcoming it with a docile spirit. There is a relationship between the word, our acceptance of it and the transformation it brings about. For this reason, the Lenten journey is a welcome opportunity to heed the voice of the Lord and renew our commitment to following Christ, accompanying him on the road to Jerusalem, where the mystery of his passion, death and resurrection will be fulfilled.

## Listening

This year, I would first like to consider the importance of making room for the word through listening. The willingness to listen is the first way we demonstrate our desire to enter into relationship with someone.

In revealing himself to Moses in the burning bush, God himself teaches us that listening is one of his defining characteristics: "I have observed the misery of my people who are in Egypt; I have heard their cry" (Ex 3:7). Hearing the cry of the oppressed is the beginning of a story of liberation in which the Lord calls Moses, sending him to open a path of salvation for his children who have been reduced to slavery.

Our God is one who seeks to involve us. Even today he shares with us what is in his heart. Because of this, listening to the word in the liturgy teaches us to listen to the truth of reality. In the midst of the many voices present in our personal lives and in society, Sacred Scripture helps us to recognize and

respond to the cry of those who are anguished and suffering. In order to foster this inner openness to listening, we must allow God to teach us how to listen as he does. We must recognize that "the condition of the poor is a cry that, throughout human history, constantly challenges our lives, societies, political and economic systems, and, not least, the Church."[1]

## Fasting

If Lent is a time for listening, fasting is a concrete way to prepare ourselves to receive the word of God. Abstaining from food is an ancient ascetic practice that is essential on the path of conversion. Precisely because it involves the body, fasting makes it easier to recognize what we "hunger" for and what we deem necessary for our sustenance. Moreover, it helps us to identify and order our "appetites," keeping our hunger and thirst for justice alive and freeing us from complacency. Thus, it teaches us to pray and act responsibly towards our neighbor.

With spiritual insight, Saint Augustine helps us to understand the tension between the present moment and the future fulfilment that characterizes this custody of the heart. He observes that: "In the course of earthly life, it is incumbent upon men and women to hunger and thirst for justice, but to be satisfied belongs to the next life. Angels are satisfied with this bread, this food. The human race, on the other hand, hungers for it; we are all drawn to it in our desire. This reaching out in desire expands the soul and increases its capacity."[2] Understood in this way, fasting not only permits us to govern our desire, purifying it and making it freer, but also to expand it, so that it is directed towards God and doing good.

However, in order to practice fasting in accordance with its evangelical character and avoid the temptation that leads to pride, it must be lived in faith and humility. It must be grounded in communion with the Lord, because "those who are unable to nourish themselves with the word of God do not fast properly."[3] As a visible sign of our inner commitment to turn away from sin and evil with the help of grace, fasting must also include other forms of self-denial aimed at helping us to acquire a more sober lifestyle, since "austerity alone makes the Christian life strong and authentic."[4]

In this regard, I would like to invite you to a very practical and frequently unappreciated form of abstinence: that of refraining from words that offend and hurt our neighbor. Let us begin by disarming our language, avoiding harsh words and rash judgement, refraining from slander and speaking ill of those who are not present and cannot defend themselves. Instead, let us strive to measure our words and cultivate kindness and respect in our families, among our

friends, at work, on social media, in political debates, in the media and in Christian communities. In this way, words of hatred will give way to words of hope and peace.

**Together**

Finally, Lent emphasizes the communal aspect of listening to the word and fasting. The Bible itself underlines this dimension in multiple ways. For example, the Book of Nehemiah recounts how the people gathered to listen to the public reading of the Law, preparing to profess their faith and worship through fasting, so as to renew the covenant with God (cf. 9:1-3).

Likewise, our parishes, families, ecclesial groups and religious communities are called to undertake a shared journey during Lent, in which listening to the word of God, as well as to the cry of the poor and of the earth, becomes part of our community life, and fasting a foundation for sincere repentance. In this context, conversion refers not only to one's conscience, but also to the quality of our relationships and dialogue. It means allowing ourselves to be challenged by reality and recognizing what truly guides our desires — both within our ecclesial communities and as regards humanity's thirst for justice and reconciliation.

Dear friends, let us ask for the grace of a Lent that leads us to greater attentiveness to God and to the least among us. Let us ask for the strength that comes from the type of fasting that also extends to our use of language, so that hurtful words may diminish and give way to a greater space for the voice of others. Let us strive to make our communities places where the cry of those who suffer finds welcome, and listening opens paths towards liberation, making us ready and eager to contribute to building a civilization of love.

**Pope Leo XIV**

*MARCH 2026*

Pope Leo
Monthly Intention



**FOR DISARMAMENT AND PEACE**

*Let us pray that nations move toward effective disarmament, particularly nuclear disarmament, and that world leaders choose the path of dialogue and diplomacy instead of violence.*

# FORMATION COMMISSION

## 1. Consecrated Day Celebration



The Day of Consecrated Life, observed annually on 2nd February, the Feast of the Presentation of the Lord, was prayerfully and joyfully celebrated at the Novitiate. This special day, instituted by Pope John Paul II in 1997, is dedicated to thanking God for the gift of consecrated life and praying for all those who have dedicated themselves to the service of the Church through the evangelical counsels of poverty, chastity, and obedience.

The celebration at the sacred Heart Novitiate began with a solemn Eucharistic celebration, highlighting the theme of self-offering in the spirit of Christ. The novices actively participated. This served as a profound reminder of their vocation journey and deepened their desire to grow in fidelity to the charism of the Congregation. The celebration concluded with thanksgiving to God for the gift of vocation and with renewed zeal to live the consecrated life in the spirit of humility, fraternity, and missionary commitment.


---

## 2. Founder's Day Celebration – In Loving Memory of Archbishop John Aelen

The Founder’s Day was joyfully celebrated in grateful remembrance of Archbishop John Aelen, whose vision and missionary zeal laid the foundation of our Congregation. The day began with a prayerful visit to St. Mary's Cathedral, where the mortal remains of our beloved Founder repose. At his tomb, the sisters and novices gathered in silence and gratitude, offering special prayers for his intercession and renewing their commitment to live the charism he entrusted to the Congregation.

From there, the community proceeded to the historic Vepery Convent, the very place where Archbishop John Aelen first initiated the Congregation. Standing in that sacred space of beginnings, the sisters reflected on the humble origins of the Institute and the courageous faith of the Founder, who responded generously to the needs of his time. The celebration was marked by moments of prayer, sharing, and joyful fellowship, followed by a simple picnic that strengthened the bonds of sisterhood. The day served as a meaningful reminder of our roots and inspired all to carry forward the Founder’s mission with renewed zeal, fidelity, and love for the marginalized.May the spirit of our Founder continue to guide and strengthen us in our vocation and service.







## 3. Synoptic Gospel Class



The novices were privileged to attend an enriching class on the Synoptic Gospels conducted by Rev. Fr. Beskline. The sessions focused on the Gospels of Matthew, Mark, and Luke, highlighting their similarities, unique perspectives, and theological themes. Father explained the historical background, authorship, and intended audiences of each Gospel, helping the novices understand the context in which they were written. He emphasized the central message of the Kingdom of God and the compassionate ministry of Jesus, especially towards the poor and marginalized.

The course has inspired the novices to root their consecrated life more deeply in the Gospel values and to follow Christ in the spirit of humility, service, and missionary zeal.

---

## 4. Franciscan Spirituality Class



The novices had an inspiring and formative session on Franciscan Spirituality conducted by Our former Mother General Rev. Sr. Rita Michael. The class centered on the life and spirit of St. Francis of Assisi, whose radical love for Christ, simplicity of life, and deep communion with creation continue to guide the Franciscan way of living. The core values of Franciscan spirituality such as poverty, humility, fraternity, joyful service, and love for the poor and marginalized was explained.

The session also highlighted the spirit of minority and obedience as essential elements of Franciscan consecrated life. The class enriched the novices' understanding of their charism and inspired them to embrace their vocation with renewed zeal, simplicity, and missionary enthusiasm.

---

## 5. Class on Basic rights for women and POCSO



An informative and awareness-oriented class on the Basic Rights of Women and the Protection of Children from Sexual Offences Act (POCSO) was conducted for the novices by Rev. Sr. Joice Fermi, Lawyer

Rev. Sr. Joice Fermi clearly explained the fundamental rights guaranteed to women under the Constitution of India and emphasized the importance of dignity, equality, and protection against discrimination and violence. She also gave a detailed overview of the POCSO Act, highlighting its objective to safeguard children from sexual abuse and exploitation. The session helped the novices understand their moral and social responsibility to protect the vulnerable, especially women and children.



## 6. One Year formation Course for Pre- novices

Rev. Sr. Christhu Rani, Assistant Superior General and Formator, along with Rev. Sr. Leema Rose, Economer Secretary, and Rev. Sr. Anbumary, Additional Secretary, undertook a visit to Bangalore to make arrangements for the return of the pre-novices who had completed their one-year formation course at Jyothir Bhavan, Carmelaram. They also visited our tertian Sisters at Sanyasa, Bangalore, who are undergoing their final profession preparatory course.

## 7. Tamil Language Class



At Greccio, Rev. Sr. Pushpa Thomas taught Tamil language classes to the Aspirants and enthusiastically trained them in devotional songs. Through her dedicated guidance, the Aspirants improved their pronunciation, communication skills, and confidence in expressing themselves. The sessions also contributed to their cultural appreciation and enriched their spiritual formation.

## 8. Class on Congregation History

Rev. Sr. Leena Gandhi offered sessions on Congregation History, enabling the Aspirants to deepen their understanding of the charism, heritage, and mission of the Congregation. These formative sessions enriched their spiritual and community life.



Rev. Sr. **Christhu Rani, FSJ**
Formation Commission Co-ordinator


# EVANGELISATION COMMISSION



நம் நிறுவுனர் தந்தை ஜான் ஆலன் அவர்களின் விண்ணகப்பிறப்பு விழா நிகழ்வை சிறப்பாக கொண்டாட, சிறப்பு வழிபாட்டுக்காக செப வழிபாட்டு கையேடு தயாரித்து வழங்கப்பட்டது. அனைத்து இல்லங்களிலும், நிறுவனங்களிலும் நம் தந்தை ஜான் ஆலன் அவர்களின் விண்ணகப் பிறப்பு நிகழ்வு சிறப்பாக சிறப்பிக்கப்பட்டு இறை ஆசீர் பெறப்பட்டது. Aelen Favorite குழந்தைகளுக்கு உணவு பொருள், கல்வி உபகரணம் கொடுத்து உதவி செய்யப்பட்டது.

Rev. Sr. **Christhu Rani, FSJ**
Evangelisation Commission Co-ordinator

# VOCATION COMMISSION



26.01.2026 அன்று மாலை 8.40 மணியளவில் ஆன்லைன் (Google Meet) மூலம் ஆதம்பாக்கத்தில் இறையழைத்தல் ஒருங்கிணைப்பாளர் கூட்டம் நடைபெற்றது. இதில் புனித வளனார் மாநிலத்தின் மாநில இறையழைத்தல் பணிக்குழு மற்றும் தொடர் உருவாக்க பணிக்குழு சார்பில் ஆன்லைன் வழியாக இக்கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டம் தூய ஆவியானவரின் பாடலுடன் துவங்கப்பட்டது.

இறைவனின் அழைப்பை உணர்தல், துறவற அழைத்தல், பணியழைத்தல் மற்றும் கத்தோலிக்க குடும்ப வாழ்வில் இறைவனின் அழைப்பின் முக்கியத்துவம் குறித்து கலந்துரையாடப்பட்டது. மேலும், பள்ளியளவில் Vocation Club அமைத்தல், Vocation Day கொண்டாடுதல் மற்றும் மாணவிகளிடையே இறையழைத்தல் ஆர்வத்தை வளர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இக்கூட்டத்தில் மாநில இறையழைத்தல் மற்றும் தொடர் உருவாக்க பணிக்குழு உறுப்பினர்கள் 6 பேர் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளையும் அனுபவங்களையும் பகிர்ந்தனர். இந்நிகழ்வில் பங்கேற்ற அனைவருக்கும் ஆன்மீக உற்சாகத்தையும் தெளிவையும் அளித்தது சிறப்புமிக்கது.

---



2. 29.01.2026 அன்று திருவொற்றியூரில் மாணவிகளிடையே இறையழைத்தலை ஊக்குவித்தல் நடைபெற்றது. இதில் மண்டல இறையழைத்தல் ஒருங்கிணைப்பாளர்கள் Rev. Sr. நம்பிக்கை ரெஜினா மேரி, Rev. Sr. செசிலி அவர்களால் வழிநடத்தப்பட்டது. நமது தாய் திருச்சபையானது இவ்வருடத்தை புனித பிரான்சிஸ் அசிசியாருக்கு அர்ப்பணித்திருப்பது சிறப்புக்குரியது. இதனை முன்னிட்டு, எமது FSJ சபை சகோதரிகள் மாணவிகளுடன் தங்கள் ஆன்மீக அனுபவங்களை மகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொண்டனர்.

புனித பிரான்சிஸ் அசிசியாரை ஆன்மீக புனிதராகக் கொண்டு, அவரது ஆன்மீகத்தை உள்ளுயிராகக் கொண்டு வாழும் எமது சபையின் பணிகளை அவர்கள் விளக்கினர். எமது சபையை நிறுவியவர் மேதகு ஆயர் ஜான் ஆலன் அவர்கள் என்பதையும், எமது சபை பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளை மையமாகக் கொண்டு தொடங்கப்பட்டதையும் மாணவிகளிடம் பகிர்ந்தனர். காலத்தின் தேவைகளை உணர்ந்து, எமது சகோதரிகள் இந்தியாவின் பல மாநிலங்களிலும், குறிப்பாக தமிழகத்திலும், அயல் நாடுகளிலும் ஏழை எளிய மக்களுக்காக பல்வேறு பணிகளைச் செய்து வருகிறோம் என்பதையும் எடுத்துரைத்தனர். தங்களுக்குத் துறவற அழைத்தல் இறைவனால் எவ்வாறு கிடைத்தது என்பதைப் பகிர்ந்து, மாணவிகளுக்கு உற்சாகமும் ஊக்கமும் அளித்தனர். 6 முதல் 10 வகுப்பு வரை பயிலும் மாணவிகள் 21 பங்கேற்றோர்கள். இதில் தொடர்ந்து தொடர்பு கொள்ள விரும்பியவர்களின் விவரங்களும் சேகரிக்கப்பட்டன.

3. 19.02.2026 அன்று திருவொற்றியூர் மண்டல இறையழைத்தல் பணி பொறுப்பு அருட்சகோதரிகளையும் ஏற்கனவே பள்ளியில் சந்தித்த போது பெயர் தந்த +2 பயிலும் மாணவி (எர்ணாவூர்) அவர்கள் குடும்பத்தையும் பெற்றோரையும் சந்தித்து பேசி இறையழத்தலை, இயேசுவின் சீடத்துவ வாழ்வை மனதில் விதைத்து, எழுதவுள்ள பொது தேர்விற்கு வாழ்த்துக்கள் கூறி செபித்து வந்தோம். ஒத்துழைப்பு தந்து சிறப்பாக இறையழைத்தல் அழைத்தல் பணி செய்து கொண்டிருக்கும் எண்ணூர், நேத்தாஜி நகர், திருவொற்றியூர் இல்லத்தலைமை மற்றும் உடன் அருட்சகோதரிகள் அனைவர்க்கும் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும். தொடர்பணிகள் சிறக்கட்டும்.



## 4. Vocation Motivation Programme



A Vocation Motivation Programme was conducted for the hostel girls of Classes VIII to X at Assisi Girls Hostel, mondasoro on 3 February 2026, in the convent premises. The session was animated by Rev. Sr. Ubagara Mary, and Rev.Sr. Leena addressed the girls on the theme of God's loving call in each person's life. They explained that vocation is not limited only to becoming a Sister but it is about discovering God's unique plan and purpose for each individual. Rev. Sr.Leena encouraged the girls to cultivate the habit of daily prayer, to listen attentively to God's voice, and to grow in faith and service. The programme was meaningful and inspiring. The girls actively participated in the session, and some of them expressed their willingness and readiness to join our Congregation in the future. The session concluded with a prayer, entrusting all the girls to God's guidance and blessings.

Rev. Sr. **Christhu Rani, FSJ**
Vocation Commission Co-ordinator

## Blessing

The renovated convent and school building in Enoore was blessed and inaugurated on 7th February 2026. The event was held in the presence of Superior General Rev. Sr. Arockiam, General Economer Sr. Celia, Provincial Superior Sr. Mercy Fathima, team members of Chennai Province, and Fr. Prem Raj, Parish Priest. The function was a success under the Providence of St. Joseph.





## 1. AELEN FAVOURITE DAY CELEBRATION

Aelen Favourite Day was solemnly celebrated on 16th February at Don Bosco English Medium School. On this special occasion, Mr. Jac, Mrs. Marian, and Rev. Sr. Arulmary graciously visited the institution and joined the celebration. The programme commenced with a warm welcome, followed by a few cultural performances presented by the students. The children enthusiastically showcased their talents through songs and other creative items, adding joy and meaning to the celebration. As part of the observance, gifts were distributed to Bishop Alen's favourite students as a token of love and appreciation. The gesture brought great happiness to the students and fostered a spirit of encouragement and gratitude.







## 2. பெற்றோரை கொண்டாடுவோம்: ஆதம்பாக்கம்

ஆதம்பாக்கம் புனித மார்க் தொடக்கப்பள்ளியில் 26.02.2026 அன்று பெற்றோரை கொண்டாடுவோம் என்ற விழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பெற்றோர்களாகிய நீங்கள் உங்கள் பெற்றோரை கவனிப்பதிலும் நேசிப்பதிலும் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். உங்களை பார்க்கும் எம் பள்ளி உங்கள் குழந்தைகள் உங்களை சிறப்பாக பார்த்துக் கொள்வார்கள் என்ற நோக்கத்தில் மாணவர்கள் பெற்றோர்கள் அனைவரும் சேர்ந்து உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். மாணவர் சேர்க்கையை வலியுறுத்தி அடையார் சரக வட்டார கல்வி அலுவலர் அவர்கள் சிறப்பாக பேசினார்கள். அன்றைய நாளில் சென்னை அரிமா சங்கத்தால் இலவச கண் மருத்துவ முகாம் பெற்றோருக்காக ஏற்பாடு செய்யப்பட்டது. மிகுதியான பெற்றோர்கள் பலரும் மாணவச் செல்வங்களும் பயனடைந்தனர்.





Rev. Sr. **K.A. Susai Mary**, FSJ
Educational Commission Co-ordinator

# Golden
# JUBILEE CELEBRATION



### சகோ. ஆஞ்சலா

பெற்றோர்:
**திரு. சாமுவேல்**
**திருமதி. கண்ணம்மாள்**

உடன் பிறந்தோர்: **8 பேர்**

மறைமாவட்டம்:
**பெங்களூர் உயர்மறைமாவட்டம்**

பிறப்பிடம்: K.G.F.

பணி: **கல்விப்பணி**

பணித்தளம்:
**திருச்சி மறைமாவட்டம் – கருமண்டபம்**

விருதுவாக்கு:
**ஏழைகளின் தோழமையில் உடனிருந்து பணியாற்றிட**

அமைதியின் தூதனாய் என்னை பயன்படுத்தும் என்ற தூய பிரான்சீஸின் செபத்தில் ஏழை எளிய மக்களின் வாழ்வில் அன்பு, அமைதி உண்மைக்கு வித்திட்டு கல்விப் பணியில் தலைமையாசிரியையாக பணியாற்றி மனிதனாய் வாழ்வதைவிட மனித நேயத்தோடு வாழ்ந்து சகோதர உறவை கட்டி எழுப்பி வரும் சகோதரி. ஆஞ்சலா அவர்களை வாழ்த்துகிறோம்.



### சகோ. விஜயா ஆரோக்கிய மேரி

பெற்றோர்:
**திருவாளர். தங்கராஜ்**
**திருமதி. ராணியம்மாள்**

உடன் பிறந்தோர்: **7 பேர்**

மறைமாவட்டம்:
**சென்னை மயிலை உயர் மறைமாவட்டம்**

பிறப்பிடம்: **லிட்டில் மவுன்ட்**

பணி: **கல்விப்பணி**

பணித்தளம்:
**செங்கை மறைமாவட்டம்**
**புனித தோமையார்மலை**

விருதுவாக்கு:
**ஏழை எளியோரில் இயேசுவைக் காண**

பகையுள்ள இடத்தில் பாசத்தை விதைத்த தூய பிரான்சீஸின் வழியில் கிராமப்புற பணித்தளங்களில் கல்விப் பணியின் வழியாக ஏழை எளிய மக்களிடம் இனிமையாகப் பேசி இன்முகத்துடன் பழகி பகை உணர்வை பாசத்தால் வென்றெடுக்க ஏழை எளியவரில் இயேசுவைக் கண்டு உள்ளன்போடும், உறுதியோடும் உழைத்து வரும் சகோதரி. விஜயா ஆரோக்கிய மேரி அவர்களை வாழ்த்துகிறோம்.

# Golden
# JUBILEE CELEBRATION



**சகோ. ஜுடித்**

பெற்றோர்:
**திருவாளர். தனிஸ்லாஸ்**
**திருமதி. மேரி**

உடன் பிறந்தோர்: **9 பேர்**

மறைமாவட்டம் :
**தூத்துக்குடி மறைமாவட்டம்**


பிறப்பிடம்: **வடக்கன்குளம்**

பணி: **கல்விப்பணி**

பணித்தளம்:
**செங்கை மறைமாவட்டம்**
**புனித தோமையார் மலை**

விருதுவாக்கு:
**பிறரை மகிழ்வித்து தான் மகிழ்தல்**

இருள் சூழ்ந்த இடத்தில் ஒளியை ஏற்றிய தந்தை தூய பிரான்சீசை போன்று வாழ்வில் ஒளியிழந்து விடியலுக்காய் ஏங்கித் தவிக்கும் ஏழை எளியவரின் வாழ்வில் கல்விப்பணியின் வழியாக அறிவு என்னும் ஒளி ஏற்றி விடியல் என்பது கிழக்கில் அல்ல, உங்களது உழைப்பில் என்று தலைமையாசிரியையாக இருந்து உரமூட்டி ஏழை மக்களுக்கு உதவி செய்து வரும் சகோதரி. ஜூடித் அவர்களை ஒளிநிறைந்த மனதோடு வாழ்த்துகிறோம்.



**சகோ. ஜெசிந்தா மேரி**

பெற்றோர்:
**திருவாளர். லூர்து சாமி**
**திருமதி. அன்னம்மாள்**

உடன் பிறந்தோர்: **3 பேர்**

மறைமாவட்டம்: **சேலம் மறைமாவட்டம்**

பிறப்பிடம்: **அரிசிபாளையம்**


பணி: **சமூகப்பணி**

பணித்தளம்: **பன்வேல் மும்பை**

விருதுவாக்கு:
**என் கடன் பணி செய்து இருத்தலே**

மன வேதனை உள்ள இடத்தில் மன்னிப்பை விதைத்த புனித பிரான்சீசின் அடிச்சுவட்டில் சமுதாயத்தில், குடும்பங்களில் மன்னிக்கப்படாமல் வேதனையுறும் ஏழை எளிய மக்களுக்கு சமூகப்பணி வழியாக செயலாற்றி தண்டனை கொடுப்பதற்கு தாமதம் செய். ஆனால் மன்னிப்பு கொடுப்பதற்கு யோசனை கூடச் செய்யாதே என்னும் புனித அன்னை தெரசாவின் அமுத மொழியை வாழ்வாக்கி இல்லத்தலைவியாய் பிறரை மகிழ்வித்து தானும் மகிழ்ந்து பணி செய்து வரும் சகோதரி. ஜெசிந்தா மேரி அவர்களை நிறைமனதுடன் வாழ்த்துகிறோம்.

# Golden
## JUBILEE CELEBRATION



### சகோ. நிர்மலா மேரி

பெற்றோர்:
**திருவாளர். பாலய்யா**
**திருமதி. கித்தேரியம்மாள்**

உடன் பிறந்தோர்: **5 பேர்**

மறைமாவட்டம் :
**செங்கை மறைமாவட்டம்**

பிறப்பிடம்: **ஓட்டந்தாங்கல்**

பணி: **நலவாழ்வு பணி**

பணித்தளம்:
**செங்கை மறைமாவட்டம் – அச்சரபாக்கம்**

விருதுவாக்கு:
**உமது திருவுளம் நிறைவுற**

அவநம்பிக்கை உள்ள இடத்தில் நம்பிக்கையை விதைத்த புனித பிரான்சீசின் பாதையில் உடனிருக்கவும், உறுதியூட்டவும், வழிகாட்டவும் யாருமின்றி, நம்பிக்கை இழந்து வாழும் எளியவருக்கும், வறியவருக்கும் துணையாக இருந்து குணமளிக்கும் நலப்பணியின் வழியாக நலம் தந்து தனது துடிப்பான வார்த்தைகளால் ஆறுதலித்து சுகமளித்து இறைதிருவுளம் நிறைவேற்ற பணியாற்றி வரும் சகோதரி நிர்மலா மேரி அவர்களை நம்பிக்கை நிறைந்த மனதோடு வாழ்த்துகிறோம்.



### சகோ. மரிய புஷ்பம்

பெற்றோர்:
**திருவாளர். சவரிமுத்து**
**திருமதி. ராஜம்மாள்**

உடன்பிறந்தோர்: **6 பேர்**

மறைமாவட்டம்: **குழித்துறை**

பிறப்பிடம்: **கல்குறிச்சி**

பணி: **சமூகப்பணி**

பணித்தளம்:
**சென்னை மயிலை உயர்மறைமாவட்டம்**
**வேப்பேரி**

விருதுவாக்கு:
**ஏழை மக்களுக்கு உதவி செய்திட**

ஐயமுள்ள சூழலில் விசுவாசத்தை விதைத்த தூய பிரான்சீசின் விசுவாசத்தை போன்று வாழ்வின் பல்வேறு நெருக்கடியில் உழன்று மிகுந்த அச்சத்தோடு வாழும் ஏழை எளியவரின் உள்ளத்தில் இறை வார்த்தையை விதைத்து “முளைத்தால் மரம் இல்லையேல் உரம்” என்பதை வாழ்வின் லட்சியமாகக் கொண்டு சமூகப்பணி வழியாக என் கடன் பணி செய்வதே என்று உழைத்து வரும் சகோதரி மரிய புஷ்பம் அவர்களை மனநிறைவோடு வாழ்த்துகிறோம்.

# Golden
# JUBILEE CELEBRATION



## சகோ. N.S. பாத்திமா

பெற்றோர்:
**திருவாளர். செல்வராஜ்**
**திருமதி. ஆரோக்கிய மேரி**

உடன்பிறந்தோர்: **11 பேர்**

மறைமாவட்டம்: **தர்மபுரி மறைமாவட்டம்**


பிறப்பிடம்: **கிருஷ்ணகிரி**

பணி: **கல்விப்பணி**

பணித்தளம்: **சென்னை மயிலை உயர்மறைமாவட்டம் – வேப்பேரி**

விருதுவாக்கு:
**கல்வியில் பின்தங்கிய மாணவிகளை முன்னேற்றிட**

துயரம் நிறைந்த உள்ளத்தில் மகிழ்ச்சியை விதைத்த தூய பிரான்சீசின் வாழ்வை போல வறுமை, நோய், தனிமையில் போராடிக் கொண்டிருக்கும் ஏழை எளிய குழந்தைகள் வாழ்வில் கல்விப்பணி வழியாக மகிழ்ச்சியை மலரச்செய்ய, வாழ்க்கை ஒரு போராட்டம், அதை போராடி வெல்லுங்கள் என்று தலைமையாசிரியையாக கல்வியில் பின்தங்கிய மாணவிகளை முன்னேற்றுவதை தனது இலக்காக கொண்டு வாழ்ந்து வரும் சகோதரி. N.S.பாத்திமா அவர்களை மகிழ்வோடு வாழ்த்துகிறோம்



## சகோ. சூசை மேரி

பெற்றோர்:
**திருவாளர். பெரியநாயகம்**
**திருமதி. மரியம்மாள்**

உடன் பிறந்தோர்: **5 பேர்**

மறைமாவட்டம்:
**கும்பகோணம் மறைமாவட்டம்**

பிறப்பிடம்: **தென்னூர்**

பணி: **கல்விப்பணி**

பணித்தளம்: **செங்கை மறைமாவட்டம் மறைமலை நகர்**

விருதுவாக்கு: **இறைவனோடும் மனிதனோடும் நிலைத்த உறவு**

ஆறுதல் பெறுவதை விட ஆறுதல் அளித்த தூய தந்தை பிரான்சீசின் அடிச்சுவட்டில் சபையின் உருவாக்கப்பணி பொறுப்பாளராய் பல சகோதரிகளின் வாழ்வில் வெளிச்சமாய் நின்று பிறரின் துன்ப துயரங்களில், இழப்பு, இறப்பு போன்ற துயரமான நேரங்களில் ஆறுதல் தேடி தம்மை நாடிவரும் ஏழை எளியவர்களுக்கு தலைமையாசிரியையாக கல்வியறிவு புகட்டி இல்லத்தலைவியாய் ஆறுதலான வார்த்தைகளால் வலுவூட்டி இறைவனோடும், மனிதரோடும் நிலைத்த உறவில் வாழ்ந்து வரும் சகோதரி. சூசை மேரி அவர்களை அன்போடு வாழ்த்துகிறோம்.

# Golden
## JUBILEE CELEBRATION



### சகோ. ரோசாலி

பெற்றோர்:
**திருவாளர். மைக்கேல்**
**திருமதி. சவரியம்மாள்**

உடன் பிறந்தோர்: **5 பேர்**

மறைமாவட்டம்:
**பாண்டி, கடலூர் உயர்மறைமாவட்டம்**


பிறப்பிடம்: **சத்தியமங்கலம்**

பணி: **கல்விப்பணி**

பணித்தளம்:
**வேலூர் மறைமாவட்டம், வந்தவாசி**

விருதுவாக்கு: **ஏழை பெண்குழந்தைகள் வாழ்வு முன்னேற**

புரிந்து கொள்ளப்படுவதை விட பிறரை புரிந்து கொண்ட தூய பிரான்சீசின் வாழ்வை முன்மாதிரியாக கொண்டு தன்னோடு இருப்பவர்கள், பணித்தளத்தில் உள்ள விளிம்பு நிலை மக்களின் உடல் உள்ளம் மற்றும் வாழ்வின் தேவைகளை அறிந்து, புரிந்து அவரவரின் நிலைக்கேற்ப வாழும் வழிமுறைகளைக் கற்று தந்து குழந்தைகளோடு குழந்தையாய் தனது நகைச்சுவையான பேச்சால் சிறந்த ஆசிரியையாய் ஏழை பெண்குழந்தைகள் வாழ்வு முன்னேற உழைத்து வரும் சகோதரி. ரோசாலி அவர்களை இன்முகத்தோடு வாழ்த்துகிறோம்.



### சகோ. சவுந்தரி

பெற்றோர்:
**திருவாளர். ஜான் எபினேசர்**
**திருமதி. அற்புத மேரி**

உடன்பிறந்தோர்: **4 பேர்**

மறைமாவட்டம்: **வேலூர் மறைமாவட்டம்**

பிறப்பிடம்: **பள்ளிகொண்டா**

பணி: **சமூகப்பணி**

பணித்தளம்:
**செங்கை மறைமாவட்டம்**
**புனித தேமையார்மலை**

விருதுவாக்கு: **ஏழை பெண்குழந்தைகள் வாழ்வு பெற**

பிறரின் அன்பை அடைய ஆசிப்பதைவிட பிறருக்கு அன்பை அளித்த தந்தை பிரான்சீசின் வழியில் சமுதாயத்தில் நலிவுற்று, அன்பிற்காக ஏங்கும் ஒடுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட, அனாதைகள் மற்றும் கைவிடப்பட்டவர்களுக்கு அன்பை அளித்து, செல்லும் வழி எங்கும் அன்பினை விதைத்து, சிறந்த சமூகப்பணியின் வழியாக சமுதாயத்தில் அன்பை வளர்த்து வரும் சகோதரி. சவுந்தரி அவர்களை அன்போடு வாழ்த்துகிறோம்.

# Silver JUBILEE CELEBRATION



## சகோ. அமல ராணி

இவரின் பெற்றோர்:
**திருவாளர். அந்தோணி ஏசு**
**திருமதி. திவ்ய மேரி**

உடன் பிறந்தோர்: **4 பேர்**

மறைமாவட்டம்: **வேலூர் மறைமாவட்டம்**

பிறப்பிடம்: **திருமால்பாடி**

பணி: **கல்விப்பணி**

பணித்தளம்:
**கும்பகோணம் மறைமாவட்டம்**
**பெரம்பலூர்**

விருதுவாக்கு:
**ஆலன் வழியில் பெண்மை மலர**

கொடுக்கும்போது மிகுதியாய் பெறுகிறோம் என்ற தூய பிரான்சீசின் வள்ளல் தன்மையை வாழ்வாக்கி சிறந்த ஆசிரியராய், தனது இனிய குரலால் இறைவனை புகழ்ந்து பாடி தேவையில் இருப்போரை இனம்கண்டு தம்முடைய அறிவு, ஆற்றல், நேரத்தை பிறருக்கு கொடுத்து பெறுவதிலும் தருவதே இன்பம் என்று ஆலன் வழியில் பெண்மை மலர கொடையுள்ளம் கொண்டு வாழ்ந்து வரும் சகோதரி. அமல ராணி அவர்களை மனதார வாழ்த்துகிறோம்.



## சகோ. மோட்சராக்கினி

இவரின் பெற்றோர்:
**திருவாளர். சாமிநாதன்**
**திருமதி. மரியம்மாள்**

உடன் பிறந்தோர்: **2 பேர்**

மறைமாவட்டம்: **வேலூர் மறைமாவட்டம்**

பிறப்பிடம்: **இசாக்குலத்தூர்**

பணி: **கல்விப்பணி**

பணித்தளம்: **மதுரை**

உயர்மறைமாவட்டம்: **அயன் நத்தம்பட்டி**

விருதுவாக்கு:
**பிறரை உருவாக்க உடைபடு**

மன்னிக்கும் போது மன்னிப்பு அடைகிறோம் என்ற தூய பிரான்சீசின் வாழ்வால் சமுதாயத்தில், குடும்பங்களில் தனிப்பட்ட வாழ்வில் எழும் வெறுப்புணர்வுகளை நீக்கி மன்னித்து வாழும் போது ஒவ்வொருவருக்கும் இவ்வாழ்வில் மட்டுமல்ல மறுவாழ்விலும் வெற்றி கைவசப்படும் என்னும் உயரிய பாடத்தை கல்விப்பணியின் வாயிலாக சிறப்பாக செய்து பிறரை உருவாக்க தம்மையே உடைத்து பணி செய்து வரும் சகோதரி. மோட்சராக்கினி அவர்களை அன்போடு வாழ்த்துகிறோம்.

# Silver JUBILEE CELEBRATION



## சகோ. சோபியா

பெற்றோர்:
**திருவாளர். அந்தோணி சாமி**
**திருமதி. தாமஸ் மேரி**

உடன் பிறந்தோர்: **2 பேர்**

மறைமாவட்டம்: **தஞ்சை மறைமாவட்டம்**

பிறப்பிடம்: **மருதக்குடி, பூதலூர்**

பணி: **கல்விப்பணி**

பணித்தளம்:
**சென்னை மயிலை உயர்மறைமாவட்டம்**
**வேப்பேரி**

விருதுவாக்கு: **ஏழை மாணவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றிட**

மரிக்கும் போது நித்திய வாழ்விற்கு பிறக்கிறோம் என்னும் மறையுண்மையை வாழ்வாக்கிய தூய பிரான்சீசை போன்று வித்தியாசமாக சிந்தித்து வாழ்வின் பேரின்பத்தை தன் அன்றாட வாழ்வில் அனுபவித்து கல்விப் பணியின் மூலம் அறியாமை இருள் நீக்கி அறிவு புகட்டி, வாழ வழியிழந்து, வாடிக்கிடக்கும் ஏழை மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்றி வாழ்ந்து வரும் சகோதரி. சோபியா அவர்களை உவகை பொங்க வாழ்த்துகிறோம்.



## சகோ. ஸ்டெல்லா மரினா

பெற்றோர்:
**திருவாளர். மரியதாஸ்**
**திருமதி. ஆன்டனி லில்லி**

உடன் பிறந்தோர்: **6 பேர்**

மறைமாவட்டம்:
**கோவை மறைமாவட்டம்**

பிறப்பிடம்: **காரமடை**

பணி: **சமூகப்பணி**

பணித்தளம்: **செங்கை மறைமாவட்டம்**
**புனித தோமையார் மலை**

விருதுவாக்கு: **ஆறுதல் கூறி ஆதரவாகிட**

சுயநலமில்லா வாழ்வில் அமைதியை அடைய வேண்டும் என்ற தூய பிரான்சீசின் வாழ்வை போல தன்னலமின்றி உழைப்பவர்களுக்கும் தம் பணியில் பொது நலனை கருவியாக்கி அல்லல்படுவோருக்கும், சமுதாயத்தால் புறம்தள்ளி புறக்கணிக்கப்படுவோருக்கும், ஆறுதல் கூறி, ஆதரவு கொடுத்து சமூகப் பணியின் வழியாக நிறைவான அமைதியை துய்த்து துணைமாநில ஆலோசக சகோதரியாக மகிழ்ந்து பணிசெய்து வரும் சகோதரி. ஸ்டெல்லா மரினா அவர்களை பாசத்தோடு வாழ்த்தி வாழ்த்துகிறோம்.

# Silver JUBILEE CELEBRATION



## சகோ. மெல்சி மேரி

பெற்றோர்:
**திருவாளர். கபிரியேல்**
**திருமதி. அலங்கார மேரி**
உடன் பிறந்தோர்: **2 பேர்**
மறைமாவட்டம்: **வேலூர் மறைமாவட்டம்**
பிறப்பிடம்: **கொரட்டாம் பட்டு**
பணி: **கல்விப்பணி**
பணித்தளம்:
**செங்கை மறைமாவட்டம்**
**புனித தோமையார் மலை**
விருதுவாக்கு:
**ஒடுக்கப்பட்டோரின் உரிமை குரலாய்**

என் தேவா என் எல்லாமே என்று அனைத்தையும் இறை திருவுளமாக ஏற்று வாழ்ந்த தூய பிரான்சிஸைப் போன்று தம்முடைய வாழ்விலும், கல்விப்பணியிலும் ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்டோரின் உரிமைக்காய் குரல் கொடுத்து நிர்வாகத்திறனில் மிகசிறந்த தலைமை ஆசிரியையாய் பொறுப்பேற்று நம்பிக்கைக்குரியவராய் வாழ்ந்து வரும் சகோதரி. மெல்சி மேரி அவர்களை அன்போடு வாழ்த்தி வரவேற்கிறோம்.



## சகோ. வேளாங்கண்ணி

பெற்றோர்:
**திருவாளர். அருள் தாஸ்**
**திருமதி. அமலோற்பவ மேரி**
உடன் பிறந்தோர்: **3 பேர்**
மறைமாவட்டம்: **வேலூர் மறைமாவட்டம்**
பிறப்பிடம்: **திருமால்பாடி**
பணி: **கல்விப்பணி**
பணித்தளம்:
**சென்னை மயிலை உயர்மறைமாவட்டம்**
**ஆதம்பாக்கம்**
விருதுவாக்கு:
**மனிதரில் இறைவனை கண்டிட**

மீட்புக்கு ஒரே வழி ஏழ்மையே, தாழ்ச்சிக்கு ஊற்றும் அதுவே என்ற புனித பிரான்சீசின் வார்த்தைகளை வாழ்வாக்கி கல்விப்பணியில் தன்னை கரைத்து ஏழைகளின் ஏழையாய், வாழ்ந்து அவர்களின் வாழ்வு முறை, போராட்டம், இயலாமைகளை தன்னுடையதாக்கி சிறந்த தலைமையாசிரியையாய் துன்புறும் மனிதரில் இறைவனை கண்டு பணியாற்றி வரும் சகோதரி. வேளாங்கண்ணி அவர்களை இன்முகத்தோடு வாழ்த்துகிறோம்.

# Silver JUBILEE CELEBRATION



## சகோ. பிரான்சீஸ் பாப்பு

பெற்றோர்:
**திருவாளர். வின்சென்ட்**
**திருமதி. ரீட்டா**
உடன் பிறந்தோர்: **8 பேர்**
மறைமாவட்டம்:
**தூத்துக்குடி மறைமாவட்டம்**
பிறப்பிடம்: **தூத்துக்குடி**
பணி: **சமூகப்பணி**
பணித்தளம்:
**செங்கை மறைமாவட்டம் – அச்சிரப்பாக்கம்**
விருதுவாக்கு: **விளிம்பு மக்களின் விடுதலைக்காக**

கடவுள் உங்களை முழுமையாக ஏற்றுக்கொள்ள உங்களுள் எதையும் உங்களுக்கென வைத்துக்கொள்ளாதீர்கள் என்னும் புனித பிரான்சீஸின் வார்த்தைக்கேற்ப இல்லத்தலைமை சகோதரியாய் என்னுடையது அனைத்தும் பிறருடையது, என்று தன் சொந்த தேவைகள், திறமைகள், அறிவு, ஆற்றல் அனைத்தையும் தியாகம் செய்து சமூகப்பணியாற்றி விளிம்பு மக்களின் வாழ்வு உயர்வு பெற தாராளமாக பகிர்ந்து வாழும் சகோதரி. பிரான்சீஸ் பாப்பு அவர்களை சந்தோசமாய் வாழ்த்துகிறோம்.




## சகோ. பிரிஜிட் மேரி


பெற்றோர்:
**திருவாளர். சுவாமி நாதான்**
**திருமதி. சாந்தா மேரி**
உடன் பிறந்தோர்: **3 பேர்**
மறைமாவட்டம்:
**சென்னை மயிலை உயர் மறைமாவட்டம்**
பிறப்பிடம்: **பருத்திபட்டு**
பணி: **சமூகப்பணி**
பணித்தளம்: **ஜெய்ப்பூர் மறைமாவட்டம் கங்காபூர்சிட்டி**
விருதுவாக்கு: **உடைந்து உருவாக்க**

இதுகாறும் நாம் செய்தது ஒன்றுமில்லை, இனியாவது பணிபுரியத் தொடங்குவோம்! என்னும் புனித பிரான்சிஸின் பணியார்வத்தை தம்முடையதாக்கி சமூகப்பணி வழியாக தீராத பணியார்வத்தால் ஏழைகள், பெண்கள், பெண்குழந்தைகள் வாழ்வு உயர தம்மையே உடைத்து உருவாக்க பல்வேறு சவால்களை சந்தித்து வடமாநில சூழமைவுக்கு தன்னை தந்து இல்லத்தலைவியாக மாநிலத்தின் ஆலோசகராகப் பொறுப்பேற்று பணிபுரிந்து வரும் சகோதரி. பிரிஜிட் மேரி அவர்களை மகிழ்ச்சியோடு வாழ்த்துகிறோம்.

# Congratulations


## SISTERS QUALIFIED IN TAMIL NADU TET EXAM


Sr. Lourdu Amala Jayanthi



Sr. Maria Velankanni


Sr. Florence Secily


Sr. Sebastine Jayaseli


Sr. Mercia Maria


Sr. Maria Stella .S


Sr. Karonlin Mary


Sr. Amalorpavam


Sr. Jerald Arockia Kirija


Sr. A. Celine Mary


Sr. Vijaya Rani


Sr. Victoria


Sr. Kalaiselvi

TN TET தேர்வினில் சகோதரிகள் வெற்றி பெறும் வகையில், சபை அளவில் பல்வேறு விதங்களில் முயற்சி மேற்கொண்ட நம் சபை தலைமை அன்னை M. Arockiam, Educational Councilor Rev. Sr. Susai Mary, General Secretary Rev. Sr. Shaila Ruby மேலும் அனைத்து மாநிலத் தலைவிகள் மற்றும் இல்லத் தலைவிகள் அனைவருக்கும் எங்களின் நெஞ்சம் நிறைந்த பாராட்டுகளையும் மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

- Communication Commission

# St. Thomas Hospital Heart Centre: பல ஆண்டு கனவு நனவானது

St.Thomas மருத்துவமனையின் வளர்ச்சியின் முக்கிய மைல்கல்லாக, நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்ட Cardiac Catheterization Laboratory (Cath Lab) திறப்பு விழா 15.02.2026 அன்று காலை 9.30 மணியளவில் நடைபெற்றது. இந்த ஆய்வகத்தை அருட்தந்தை ஆரோக்கியசாமி அவர்கள் ஆசீர்வதித்து திறந்து வைத்தார். மருத்துவர்கள் டாக்டர். தங்க சரவணன் மற்றும் டாக்டர் ரமேஷ் அவர்கள் இணைந்து சிறப்பாக தொடங்கி வைத்தனர். அருட்தந்தை அவர்கள் தனது உரையில் இதய நோய்களுக்கு விரைவான மற்றும் துல்லியமான சிகிச்சைகளை வழங்க இந்த நவீன Cardiac Catheterization Laboratory மையம் பெரிதும் பயனள்ளதாக இருக்கும் என்று தெரிவித்தார். ஏழை எளிய மக்களும் பயன் பெறும் வகையில் பலருக்கும் இது வாழ்வு கொடுக்கும் இல்லமாக அமைய வேண்டும் என வாழ்த்தினார்.

இந்த மையத்தின் திறப்புவிழா எங்கள் மருத்துவமனையின் மருத்துவ தரத்தை உயர்த்தும் முக்கிய முன்னேற்றமாகும். “உயிர் காக்கும் சேவையில் நம்பிக்கையுடன்” என்ற எங்கள் இலக்கை நோக்கிய பயணத்தில் எங்களுடன் உறுதுணையாக இருந்து வழிகாட்டிய எம் சபை தலைமை அன்னை M.ஆரோக்கியம் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த புதிய மையத்தில் வழங்கப்படும் சிகிச்சைகள்,

- ☞ Angiogram, ☞ Angioplasty ☞ Pacemaker Implantation ☞ Ep Study + Rf Ablation
- ☞ Valve Replacement Surgery ☞ Septal Defect Repair ☞ Heart Transplantation
- ☞ Open Heart/Mics Surgery ☞ Peadiatric Cardiac Surgery
- ☞ Heart & Lung Transplant Surgery ☞ Trans Catheter Aortic Valve Implantation (TAVI)
- ☞ Coronary Artery Bypass Graft Surgery (CABG)

இந்நிகழ்வில் மருத்துவர்கள், அருட்சகோதரிகள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனை ஊழியர்கள் கலந்துகொண்டனர். சிறப்பு விருந்தினர்கள் மற்றும் பங்குகேற்ற அனைவரும் இந்த புதிய முயற்சியை பாராட்டி, இது சமூகத்திற்கு பெரும் நன்மை அளிக்கும் என தெரிவித்தனர்.

இந்த புதிய மைல்கல் எம் மருத்துவமனையில் செயலாக்கம் பெற அயராது உழைத்த எம் மருத்துவமனையின் நிர்வாகி மற்றும் FSJ சபையின் General Councilor Dr. Sr.Mary Jenova அவர்களுக்கு எம் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.








GOLDEN & SILVER JUBILEE CELEBRATION 2026

## 1. நிர்மலா பிசியோதெரபி கிளினிக் பார்வை – பாதிரி



வந்தவாசி வட்டாரத்தில் அமைந்துள்ள பாதிரி என்ற ஊரில், நமது சபைக்கு சொந்தமான நிர்மலா பிசியோதெரபி கிளினிக் பல ஆண்டுகளாக செயல்பாடு இன்றிய நிலையில் இருந்தது.

இந்நிலையிலும், Rev. Sr. Amali Vedha, Rev. Sr. Jothi and Rev. Sr. Thangam ஆகியோர் தங்களால் இயன்ற அளவும், தலைமையகத்தின் ஆதரவுடனும், அந்த இடத்தை சுத்தம் செய்து பாதுகாத்து வந்தனர்.

31.01.2026 அன்று, Rev. Sr. Dr. Mary Jenova, Rev. Sr. Sheeba மற்றும் St. Thomas மருத்துவமனையில் பணியாற்றும் ஐந்து பணியாளர்களுடன் இணைந்து, இக்கிளினிக்கை பார்வையிட்டு, சுத்தம் செய்து, இதற்கு புதிய உருவம் அளிக்கும் முயற்சியை மேற்கொண்டனர். அன்றைய நாளில், உணவு ஏற்பாடுகள், உடன் இருப்பு, ஆலோசனைகள் மற்றும் உற்சாகம் அளித்து துணை நின்ற Rev. Sr. Amali Vedha, Rev. Sr. Jothi and Rev. Sr. Thangam அவர்களுக்கு எங்களின் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இக்கிளினிக்கை பார்வையிட வந்திருந்த Rev. Sr. Arputha அவர்களுக்கும் நன்றிகள்

மேலும், Rev. Sr. Amali Vedha அவர்களின் உதவியுடன், அந்த ஊர் மக்களை நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது எங்களுக்குப் பெரும் மகிழ்ச்சியை அளித்தது. Rev. Sr. Joice Fermi, Lawyer அவர்கள் அரசாங்க சம்பந்தமான வேலைகள் அனைத்தையும் கூடிய சீக்கிரமாக முடித்து தருவதாகவும் கூறியிருக்கிறார்கள். இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்காகவும், அப்பகுதியில் வாழும் ஏழை எளிய மக்களின் நலனுக்காகவும், நாம் அனைவரும் தொடர்ந்து ஜெபிப்போம்.

## 2. St. Joseph's Health Centre - கமலாபுரம்

02.02.2026 அன்று St. Joseph's Health Centre, கமலாபுரம் இதன் தரத்தை மேலும் உயர்த்தும் முயற்சியின் ஒரு பகுதியாக, நம் தலைமை அன்னை அவர்களின் ஆலோசனையின் பேரில் Rev. Sr. Dr. Mary Jenova, Rev. Sr. Jocie Fermi மற்றும் திரு. ஆண்டனி ஆகியோர் இணைந்து இடம் பார்வை மேற்கொண்டனர்.

இல்லத் தலைவியும், St. Joseph's Health Centre-இன் பொறுப்பாளருமான Rev. Sr. Kumarifell அவர்கள் முழுமையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கினார்கள். இடம் நேரில் பார்வையிடப்பட்டதோடு, அதனைச் சார்ந்த அரசாங்க ஆவணங்களும் சம்பந்தப்பட்ட அரசாங்க அலுவலகங்களில் சென்று சரிபார்க்கப்பட்டன.

இறுதியாக, இந்நிறுவனம் உருவாகக் காரணமாக அமைந்த Rev. Fr. Joseph Bellani அவர்களின் கல்லறையைச் சந்தித்து சிறப்பு இறைவேண்டல் செய்யப்பட்டது. மேலும், கமலாபுரம் அரசாங்க பதிவுகளில் இடம் பெற்றிருக்கும் நம் சபை அருள் சகோதரி மறைந்த Rev. Sr. Mary Theodosia அவர்களின் ஆன்மா விண்ணகத்தில் மகிழ்ந்திருக்கவும், இவ்விடத்தில் கடினமாக உழைத்து மறைந்த நம் சபை அருள் சகோதரிகளின் கல்லறைகளையும் சந்தித்து அவர்களுக்காக சிறப்பு வேண்டுதல் செய்யப்பட்டது. இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்காக எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள அனைத்து நல் முயற்சிகளிலும் இறைவனின் கரம் துணையாக இருக்க தொடர்ந்து ஜெபிப்போம்.



## 3. Preventive Health Check-up Programme - St. Mary's Province



07.02.2026, St. Mary's Vice-Province organized a comprehensive preventive health check-up programme for our sisters at St. Thomas Hospital. Altogether, 32 sisters, along with Rev. Sr. Emilda, Vice Provincial, and all the Council Members of the Vice Province participated in this programme. The health check-up included executive health examinations, mammogram screening, echocardiography (Echo), and consultations with physicians (MD) and other required specialists, ensuring holistic medical care for all participants.

The preventive health initiative concluded with a healing adoration, followed by the distribution of herbal plants to all the sisters who took part in the preventive health check-up, symbolizing care for both body and spirit.

We sincerely thank the hospital management team for their dedicated medical care, kind support, and warm hospitality, which greatly contributed to the success of this meaningful programme.

---

## 4. உலக நோயாளிகள் தினத்தின் சிறப்பு செயல்பாடுகள்:

## St. Joseph's Province



A) உலக நோயாளிகள் தினத்தை சிறப்பிக்கும் வகையில், மானாம்பதி கூட்ரோட்டில் வசிக்கும் நரிக்குறவர் சமூகத்தினர் இல்லங்களுக்கு நேரில் சென்று, அவர்களுக்கு இலவச மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டன. Rev. Sr. Maria Filamenal அவர்களுக்கு பாராட்டுகளும், நன்றிகளும்.



B) 11.02.2026, we celebrated World Sick Day at our St. Thomas Health Care Center with deep faith and joy. The day began with a Holy Eucharistic Celebration, invoking God's healing presence upon all those who are sick and suffering.

Following the Eucharist, cake and food were distributed to all the sick persons and differently abled children, bringing smiles, comfort, and a sense of belonging to each one. The celebration was a meaningful expression of compassion, care, and solidarity with those who need love and support the most. We appreciate Rev. Sr. Nirmala for her dedicated since.

C) In collaboration with the Government Social Welfare Department, Collectorate, Vellore, Arockia Matha Health Centre conducted an awareness programme for high school students at Old Town Ashram School on 13.02.2026. The programme covered sex education and child marriage awareness, led by the Social Welfare Department, and sessions on environmental hygiene, personal hygiene, and healthy food habits, conducted by Arockia Matha Health Centre. In addition, girls students were screened for anaemia and other health-related issues. Iron tonics and basic medicines were distributed as needed. The children greatly benefited from this programme, gaining valuable awareness and health support. Our Sincere appreciation to Rev. Sr. Saleth for her committed effort.








## Bishop John Aelen Province

Founder's Day, லூர்து அன்னை திருவிழா மற்றும் உலக நோயாளர்கள் தினத்தை நினைவுகூர்ந்து, எமது பங்கில் (Amsi) செயல்பட்டு வரும் மரியாவின் சேனை உறுப்பினர்களை எங்களது குழுமத்திற்கு அன்புடன் அழைத்தோம். அவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டதுடன், எமது குழுமத் தலைவி சகோதரி ஜெனிடா மற்றும் சகோதரி அகஸ்டினா அவர்களின் முன்னிலையில் தொடக்க ஜெபம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, அனைவரும் வாகனத்தில் சென்று, நடக்க இயலாத 13 நோயாளிகளை நேரில் சந்தித்து அவர்களுக்காக ஜெபம் செய்து, நற்கருணை வழங்கப்பட்டது. இந்த ஆன்மீகச் சேவை நிகழ்வு, நோயுற்றோரில் இறைவனை காணும் ஒரு அர்த்தமுள்ள அனுபவமாகவும், அன்பு, இரக்கம், சேவை ஆகிய மதிப்புகளை மீண்டும் நினைவூட்டும் நாளாகவும் அமைந்தது. இதற்கான முழு முயற்சிகளை மேற்கொண்ட Rev. Sr. Augustine அவர்களுக்கு நன்றிகளும், பாராட்டுகளும்.

---

## Francis of Assisi Province




A) On the occasion of the World Day of the Sick, the St. Xavier Dispensary, Siddharth Nagar, organized a medical outreach camp at Pantijangal village as part of its ongoing community service initiative. A total of 48 beneficiaries availed themselves of the medical services provided during the camp. Dr. Gautam generously conducted medical screenings and offered consultations to the patients, while Sr. Sagayam diligently distributed the prescribed medicines. The camp witnessed active and enthusiastic participation from the local community, with a notable number of women benefiting from the services rendered. The villagers expressed their heartfelt joy and sincere gratitude for this compassionate initiative, deeply appreciating the care, concern, and personal attention extended to them. Through this noble service, the Dispensary bore witness to Christ's healing ministry, bringing comfort, care, and hope to those most in need. Our Sincere appreciation to Rev. Sr. Sagayam for her committed effort.

B) உன் ஒளி விடியல் போல் எழும் விரைவில் உனக்கு நலமான வாழ்வு துளிர்க்கும் (எசாயா 58:8) என்ற இறைவார்த்தைக்கேற்ப இறைவன் நமக்கு விட்டுசென்ற சுகம் அளிக்கும் பணிகள் வழியாக வாழ்வு துளிர்க்க வழிவகை செய்து கொண்டிருக்கிறோம். 21.02.2026 அன்று Assisi Heath Center மாண்டோசொரு மருந்தகம் வழியாக, ஊட்டசத்து குறைபாடு உள்ள குழந்தைகள், பாலுட்டும் தாய்மார்கள் இவர்களை இனம் கண்டு அவர்களுக்கு (OCHA) Odisha Cathoilc Health Association Project வழியாக இயற்க்கையான முறையில் நம் வீட்டில் இருக்கும் பொருட்களை வைத்து HMHD செய்வது பற்றிய விளக்கத்தை சகோ. மார்த்தாள் அவர்கள் தெளிவாக எடுத்து கூறினார்கள். பொருட்களின் அளவு, எப்படி பக்குவ படுத்துவது, அதன் அளவு முறை, எத்தனை முறை கொடுக்க வேண்டும் என்ற செய்முறையோடு சொல்லி தந்து ஊட்டசத்து குறைபாடு உள்ள குழந்தைகளுக்கும், பாலுட்டும் தாய்மார்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. இயற்கை முறையில் செய்யப்பட்ட HMHD குடித்த பிறகு குழந்தைகள் உடல் எடையில் நல்ல வளர்ச்சி மாற்றம் கிடைக்கிறது. இதனால் குழந்தைகளும், பாலுட்டும் தாய்மார்களும் ஆரோக்கியத்துடன் வாழ வழி செய்கின்றது. HMHD குடிப்பதன் வழியாக 10கிராமங்களில் உள்ள குழந்தைகளும், தாய்மார்களும் பயன்அடைந்துள்ளனர். இதனை ஏற்பாடு செய்து அனைவரும் பயனடைய செய்த சகோதரி. மார்த்தாள் அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுகளும் வாழ்த்துகளும்.




## 5. Preventive Health Check-up – St. Thomas Hospital






21.02.2026 அன்று St. Thomas Hospital–இல் 55 நோயாளிகளுக்கு இலவசமாக கொலஸ்ட்ரால் (Cholesterol Test) பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், இலவச மருத்துவ ஆலோசனையும் வழங்கப்பட்டது. இந்த தடுப்பு சுகாதார பரிசோதனை முகாமின் மூலம், மருத்துவமனைக்கு உதவியில் இருக்கும் பகுதிகளிலும் சுற்றுவட்டாரத்தில் வசிக்கும் பொதுமக்களும் பெரிதும் பயன் பெற்றனர். இந்த நிகழ்விற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மிகுந்த ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் செய்த Rev. Sr. Sebastien அவர்களுக்கு எங்களின் உளமார்ந்த நன்றிகளும் பாராட்டுகளும் உரித்தாகும்.

---

## 6. நோயுற்றோரில் இறைவனைக் கண்டோம்:






நம் சபையை சார்ந்த Elambalur, old age home-இல் வளர்ந்து, நம் சபை அருட் சகோதரிகளால் அன்போடும் பராமரிப்போடும் வளர்க்கப்பட்ட சூசைமேரி (Ms. Susai Mary) அவர்கள், பல ஆண்டுகளாக தைராய்டு கேன்சர் (Thyroid Cancer) நோயால் பாதிக்கப்பட்டு வந்தார்கள். அவர்களுக்கு தேவையான சிகிச்சைகள் அளிக்கும் பொருட்டு, பல மருத்துவமனைகளுக்கு நம் சபை அருட் சகோதரிகள் அவர்களை அழைத்துச் சென்று பாதுகாத்து வந்தனர். கடந்த ஒரு ஆண்டு காலமாக மிகுந்த உடல்நலக் குறைவு காரணமாக St. Thomas Hospital இல் அனுமதிக்கப்பட்டு, அவர்களுக்கு தேவையான அனைத்து மருத்துவ உதவிகளும் அங்கு அளிக்கப்பட்டது. இந்நிலையில், 21.02.2026 அன்று அவர்கள் இறைவனடி சேர்ந்தார்கள். அவர்களின் விருப்பத்திற்கும், நம் சபை தலைமை அன்னை அவர்களின் நல் ஆலோசனைகளுக்கும் இணங்க, அவர்களின் உடல் எளம்பலூர் Old Age Home-க்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு மாநிலத் தலைவி. Rev. Sr. Sherine இல்லத் தலைவியான Rev. Sr. Margdalane Papathi மற்றும் old age home பொறுப்பாளர் Rev. Sr. Lilly Pushpam ஆகியோரின் பெரும் உதவியுடன், கூட்டுத் திருப்பலியோடு அவர்களின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவர்களை அன்போடு வளர்த்த நம் சபை அருட் சகோதரிகள் அனைவருக்கும், அவர்கள் நோயுற்ற காலத்தில் அயராது பணியாற்றிய St. Thomas Hospital சகோதரிகள், செவிலியர்கள், உடன் உழைப்பாளர்கள் அனைவருக்கும் எங்களின் உளமார்ந்த நன்றிகள்.

---

## 7. மானாம்பதி கண்டிகை இலவச மருத்துவ முகாம்





மானாம்பதி கண்டிகை பகுதியில் 08.02.2026 அன்று இலவச மருத்துவ முகாம் சிறப்பாக நடைபெற்றது. இந்த முகாமின் மூலம் மொத்தம் 210 பொதுமக்கள் பயன் பெற்றனர். இம்முகாமில் பொது மருத்துவம், இயற்கை மருத்துவம், சித்த மருத்துவம், பிசியோதெரபி, கண் பரிசோதனை, அக்குபஞ்சர் என்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த மருத்துவர்கள் பங்கேற்று, மக்களுக்கு முழுமையான மருத்துவ பரிசோதனைகளும் ஆலோசனைகளும் வழங்கினர். மக்களின் ஆரோக்கியத்தை முன்னிறுத்தி நடத்தப்பட்ட இம்முகாம், பொதுமக்களின் மிகுந்த வரவேற்புடனும் ஒத்துழைப்புடனும் சிறப்பாக நிறைவேறியது. இதற்காக உழைத்த Rev. Sr. Maria Filamenal அவர்களுக்கு பாராட்டுகளும் நன்றிகளும்.



**Rev. Dr. Sr. Mary Jenova, FSJ**
Health Commission Co-ordinator

# COMMUNICATION COMMISSION

“என் வாழ்வில் பேராயர் ஜான் ஆலன்” என்ற தலைப்பில், நம் நிறுவனர் தந்தையின் வாழ்வை ஆழமாக உள்வாங்கி, அவரைப் போலவே வாழத் துடித்துக் கொண்டிருக்கும் 28 சகோதரிகளின் உள்ளங்களில் இருந்து எழுத்து வடிவாக வெளிப்பட்ட சிந்தனைகள் அனைவரின் இதயங்களையும் தொட்டன. இந்த நிகழ்வில் பங்கேற்ற 28 சகோதரிகளுக்கும் எங்களின் இதயம் நிறைந்த பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**Rev. Dr. Sr. Mary Jenova, FSJ**
Communication Commission Co-ordinator

# சமூக பணிக்குழு



1. 28.01.2026 அன்று வெப்பேரியிலுள்ள 20 நபர்களைக் கொண்ட பெண்கள் மற்றும் அவர்களின் குழந்தைகள் கொண்ட சிறப்பு குழுவை சந்திக்க அயல்நாட்டிலிருந்து Mrs. கரோலீன் மற்றும் அவர்களின் மகள் வருகைதந்திருந்தார்கள். சுயதொழில் செய்ய கடனுதவிப் பெற்றுக் கொண்ட பெண்கள் எவ்வாறு தொழில் செய்து பயனடைந்து வருகிறார்கள் என்பதை பார்வையிட்டு பின்பு அவர்களுக்கான கூடகையிலும் பங்கேற்றார்கள். இந்த சந்திப்பானது அயல்நாட்டிலிருந்து பெண்களின் பொருளாதார நிலை உயர அளிக்கப்படும் கடனுதவியானது பயனுள்ள வகையில் அமைந்துள்ளதாலும் அவர்களின் குழந்தைகளும் வாழ்க்கை தரம் உயர பல விழிப்புணர்வுகள் பெற்றுவருவதையும், கண்டு மகிழ்வடைந்தார்கள் தொடர்ந்து இதுபோன்ற உதவிகள் செய்வதாகவும் உறுதியளித்தார்கள்.

---



2. 03.02.2026 அன்று 50 கிறிஸ்துவ விதவை பெண்களுக்கு சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு அளிக்கப்பட்டு தொடர்ந்து தூய மரியன்னையிடம் செபமாலை பக்தியை வளர்க்க செபமாலைகள் கொடுத்து செபிக்க வைத்தனர். தொடர்ந்து அவர்களுக்கு 1500 மதிப்புள்ள மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டன.

---

3. 08.02.2026 அன்று சமூகப்பணிக்குழுவினர்களுக்கு சமூகப்பணிமையம் புனித தோமையார்மலையில் கூடுகையானது நடைபெற்றன. இதில் 7 அருட்சகோதரிகள் கலந்துக் கொண்டு பணிகளை இன்னும் எவ்வாறு சிறப்பாக செய்யலாம் என கலந்து பேசப்பட்டது. தொடர்ந்து மார்ச் 8–ம் தேதி ஞாயிற்றுக்கிழமை தூய தோமையார் மருத்துவமனையில் பெண்கள் தினவிழாவானது சிறப்பிக்கலாம் எனவும் சிறப்பாக இவ்வாண்டு பெண்கள் தினவிழாவானது பெண்களுக்கு தேவையான “மனநலம் பெறுவோம், இயற்கையை காப்போம்” என்ற கருத்தமர்வு ஏற்பாடு செய்யலாம் என பேசப்பட்டன. அதற்கான ஏற்பாடுகளை செய்ய சகோதரிகளுக்கு பொறுப்புகள் கொடுக்கப்பட்டு கூடுகையானது நிறைவுபெற்றன.



4. 22.02.2026 அன்று இளம் பெண்களுக்கான கூடுகையானது சமூகப்பணி மையம் தோமையார் மலையில் நடைபெற்றன. இக்கூட்டுகையில் 18 இளம் பெண்கள் கலந்து கொண்டார்கள். விடுமுறை நாட்களை பயனுள்ள வகையில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை பற்றி பேசப்பட்டன. மேலும் இது போன்ற பயிற்சிகள் கொடுத்தால் இளம்பெண்கள் பயன் பெறுவார்கள் என்பதை பற்றிய விழிப்புணர்வு கொடுக்கப்பட்டன. இளம் பெண்கள் தங்களது கருத்துக்களை உற்சாகத்துடன் பகிர்ந்து கொண்டார்கள். மேலும் அவர்களுக்கு ஆற்றுப்படுத்துதல் தேவைப்பட்டால் கொடுக்கலாம் என பேசப்பட்டன. நன்றியுரைடன் கூடுகையானது நிறைவு பெற்றது.

---

5. 23.02.2026 அன்று சமூகப்பணி குழு வழியாக சுய உதவி பெறும் விதவைப் பெண்களுக்கு பொருளாதார கடன் உதவி கொடுக்கப்பட்டன. கடன் உதவியை பார்வையிட அயல்நாட்டிலிருந்து திரு ஜாக் அவர்கள் வந்திருந்தார்கள் பெண்களை குழுவாக சந்தித்து பேசினார்கள். பின் அவர்கள் எப்படிப்பட்ட தொழில்கள் செய்து வாழ்வில் முன்னேறி வருகிறார்கள் என்பதை நேரடியாக பார்வையிட்டார்கள். அனைவரும் சிறப்பாக செய்வதை பாராட்டி மேலும் தொழில் வளர்ச்சிக்கான உதவி செய்வதாக கூறி உறுதி அளித்து சென்றார்கள்.





---

6. 24 மற்றும் 25 ஆகிய தினங்களில் தமிழ்நாடு அளவிலான சிறை பணி கூடுகையானது சென்னை சாந்தோம் மீட்பு பணி மையத்தில் நடைபெற்றன. இதில் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 200 தன்னார்வலர்கள் கலந்து கொண்டார்கள் இதற்கான ஏற்பாடுகளை சென்னை மயிலை மறை மாவட்டம் செய்திருந்தார்கள். இம்மாநாட்டில் நமது சபையை சேர்ந்த மூன்று அருள் சகோதரிகள் கலந்து கொண்டு பயனடைந்தார்கள்.




**Rev. Sr. Arul Mary**
*Social Work Commission, Co-ordinator*

# FOR MY LIFE JESUS IS MY TEACHER

A good and wisdom lovely teacher. He never taught a lesson in a classroom. He had no tools to work with such as black boards, notebook, pen, pencil, rubber, paper, ruler, charts, maps, table, chair, notes of lesson, no correction, test or Examination. He used no subjects outline, kept no records, gave no grades, he never kept any subject teachers according to their degrees. His only text was ancient and well warm. His students were the poorest of the poor, the lame men and man, the deaf, the blind, the outcast, sinners, widows and etc.

His method was the same with all who came to hear and learn. He opened eyes with faith. He opened ears with simple truth and opened hearts with love a love born of forgiveness. A gentle man a humble man. He never studied Nursery, Primary, High School, Higher Secondary, college and degree or university. He kept only twelve well uneducated teachers, all are fishermen. His teaching were always in the place of open university or in the high mountains or hill place and in seashore. But his university is always opened in days and nights.

Admissions are opened, he asked the people of all over the world come to me. He asked not to honour, or give no gold awards or tribute to expertise or wisdom. And yet this quiet teacher from the hills of Galilee had fed the needs. Fulfilled the hopes and changed the lives of many millions for what he taught, brought heaven to earth and revealed God's heart to mankind. My teacher is a Doctor, well commander, confesser, forgivener, honourable judge, Advocate and deep merciful person.

For me Jesus is the best teacher because he stood as an example for the following qualities.

**T** - Stands for Thankful

**E** - Stands if Eagerness

**A** - Stands for Activity

**C** - Stands for Care

**H** - Stands for Helpful

**E** - Stands for Emphasize

**R** - Stands for Real

But Jesus is a commander - He used the wind "Peace" Be still. Jesus is a Doctor, he used to touch the sick people and make them cure, even if they touch the Jesus's garment they became cure. Jesus is a Mother, Father, Friend etc.



**Rev. Sr. Nirmala Manickaraj,**
Lands Downe, Coonoor

---

05.02.2026 அன்று St Anthony's Church, Alandur-இல் புதிதாக அமைக்கப்பட்ட நற்கருணை சிற்றாலயம் (Adoration Chapel) நம் தலைமை அன்னை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது



## ஒவ்வொரு நாளும், அவளின் விழா தான்!

பெண் என்பது பலவீனம் அல்ல,
பேராற்றலின் பிறப்பிடம்.
தாயாகப் பிறந்து உலகை தாலாட்டி,
அன்பால் மனிதரை மனிதனாக்கும்
கடவுளின் மறு உருவம்

கண்ணீரை மறைத்து சிரிப்பை வெளிப்படுத்தி,
காயங்களை தாங்கி குடும்பம் காக்கும் காவல் தெய்வம்.
மௌனத்தில் பேசும் மொழியும்,
முடிவெடுக்கும் துணிச்சலும் உலகத்தை உருமாற செய்கிறது.

கல்வி கற்றாள் வீட்டிற்கு விளக்காய் ஒளிர்கிறது,
கண்ணியம் காத்தால் நாடு உயர்கிறது.
அவள் நடந்த பாதையில் பூமி பெருமை அடைகிறது,
அவள் சிரிப்பு உலகின் இனிமை.

சமம் கேட்டால் சமுதாயம் வளர்ந்தது,
உரிமை பெற்றால் உலகம் மலர்ந்தது.
பெண்ணை மதித்திடு மனிதா,
அவள் உயர்ந்தால் தான் உயர்வாய் நீ....

பெண்கள் தினம் ஒரு நாள் மட்டுமல்ல,
ஒவ்வொரு நாளும் அவளின் விழா தான்.
பெண் இருப்பதால் உலகம் அழகு பெறுகிறது,
அவள் உயிரால் வாழ்க்கை முழு நிறைவடைகிறது.



**Rev. Sr. S. Maria Stella**
St. Joseph's Convent, Vepery

---

## Bishop John Aelen Province Day



திருச்சி ஆயர் ஆலன் மாநிலத்தில் நிறுவனர் தந்தையின் விண்ணக பிறப்பு விழாவானது 07.02.2026 சனிக்கிழமை அன்று காலை 10.00 மணி அளவில் மாநில தலைமையகத்தில் கொண்டாடப்பட்டது இதன் சிறப்பாக திருப்பலி கொண்டாட்டமானது Aelen Favourites குழந்தைகளுக்கு கொண்டாடப்பட்டது மாநிலத்தைச் சார்ந்த சகோதரிகள் அனைவரும் இதில் கலந்து கொண்டார்கள் விழாவில் கலை நிகழ்ச்சிகளும் அதோடு சகோதரிகளுக்கு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசும் அளித்து விழா எளிதாக நிறைவு பெற்றது.

# மகளிர் தினவிழா

ஆண்டுதோறும் மார்ச் 8 அன்று உலகம் முழுவதும் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. இது வெறும் வாழ்த்துக்கள் பரிமாறும் நாளல்ல "விதையாக விழுந்து மரமாக உயரும் நாளிது". பெண்களின் உரிமைகள், சாதனைகள், தியாகங்கள், சவால்கள் மற்றும் சமூக முன்னேற்றத்தில் அவர்கள் வகிக்கும் முக்கிய பங்கை நினைவு கூரும் நன்னாளாகும்.

### மகளிர் தினத்தின் வரலாறு:

"மானுடத்திற்கே பெருமை சேர்க்கும் பெண்மையே வாழ்க" 1908 ஆம் ஆண்டு New York City நகரில் ஆயிரக்கணக்கான பெண்கள் தொழிலாளர் உரிமைகளுக்காகவும், வாக்குரிமைக்காகவும் போராட்டம் நடத்தினர். இப்போராட்டத்தின் தாக்கத்தால் 1910ஆம் ஆண்டு Copenhager நகரில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் ஜெர்மன் சமூக செயற்பாட்டாளர் Chara Zetkin மகளிர் தினத்தை ஆண்டுதோறும் கொண்டாட முன்மொழிந்தார் அதன் பிறகு மார்ச் 8 உலக அளவில் மகளிர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

### சமுதாயத்தில் பெண்களின் பங்கு

பெண் என்பவள் ஒரு குடும்பத்தின் இதயம். தாயாக, மகளாக, சகோதரியாக மட்டுமல்லாமல் ஆசிரியராக, மருத்துவராக, செவிலியராக, ஆலோசகராக, ஆற்றுப்படுத்துபவராக, அரசியல்வாதியாக, அறிவியல் ஆராய்ச்சியாளராக, விஞ்ஞானியாக, விளையாட்டு வீராங்கனையாக, விண்வெளியாளராக, விமானியாக, ஓட்டுநராக, நடத்துனராக, பாடகராக, மேயராக, கலெக்டராக, பிரதமராக, கணினி பொறியியலாளராக, நாட்டின் குடியரசு தலைவராக, முதலமைச்சராக, ரயில் இன்ஜின்களை இயக்குபவராக, நீதிபதியாக, ஐ.பி.எஸ் ஆக விளங்கிய விளங்கும் பெண்கள் உலகுக்கு முன்மாதிரிகள். இவை பெண்களின் திறமைக்கு எல்லை இல்லை என்பதே சுட்டிக்காட்டுகிறது. "வேர்களோடு வேர்களாக கைகோர்க்கும் பெண்ணே வாழ்க"

### பெண்மையின் பெருமைகள்

1. உலக அளவில் பெண்ணின் ஆன்மீக தத்துவ ஞானத்தை உணர்த்திய வீரத்துறவி சுவாமி விவேகானந்தர்.
2. எண்ணங்களும் உணர்வுகளும் ஒன்றே என பெண்மையை புகழ்கிறார் மகாகவி பாரதியார்
3. பெண்கள் எல்லாம் சிறப்பு ஆசீர் பெற்றவள் தூய கன்னி மரியாள்.
4. இரக்கத்திற்கே சிறந்தவள் அன்னை தெரசா.
5. பல சூழ்ச்சிகளை முறியடித்து விவேகத்தோடு பிரச்சினைகளை வென்றவள் எஸ்தர்.
6. ஒருவர் கடவுள் மீது பற்று உறுதி கொண்டு செயல்பட்டு எத்துணை வலிமை படைத்த உலக ஆற்றல்களை வென்றுவிடலாம் என்பதை கைம்பெண் யூதித்து.
7. சாதித்தால் பெண்மையின் வாழ்வில் துயர கட்டளைகளை கடவுள் வெற்றி மகுடமாக மாற்றினார் என்பதை ருத்வின் வாழ்வில் என்பத்தார்.

பெண்கள் பல சாதனைகள் படைத்து வெற்றி நடை போட்டாலும் பெண்களுக்கு எதிராக வன்முறைகளும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களும் தொடர்ந்து வண்ணமே இருப்பது வருத்தமாகும். மேலும் பெண்களிடம் தியாகத்தையும், திறமையையும் பாராட்டுவது மட்டுமல்லாமல் அவர்களின் எதிர்கால கனவுகளை ஆதரித்து மதித்து சமத்துவமான உலகை உருவாக்க ஒன்றுபடுவோம் வெற்றி நமதே... நமதே.... எனப் பெருமையோடு வாழ்த்துகிறோம்.

இனிய மகளிர் தின வாழ்த்துக்கள்.



**Rev. Sr. G. Velanganni**
Assisi Bhavan
P.T. Parru

---

## தவக்காலம்

### 40 நாட்கள் ஒரு நீண்ட பயணம் ஆனால் இந்த பயணம் எங்கே செல்கிறது?

தவக்காலம் என்பது வெறும் உணவை குறைப்பதோ, அல்லது சில பழக்கங்களை கைவிடுவதோ மட்டுமல்ல இது நம் ஆன்மாவை செதுக்கும் ஒரு கலை. இந்த பயணத்தை ஒரு தெளிவான வரைபடமாக மாற்ற நாம் ஆறு சூத்திரத்தை பயன்படுத்தலாம் இந்த ஆன்மீக பாதையில் ஒவ்வொரு படியாக பயணிப்போம்.

### 1. திரும்புதல்

நம்முடைய அன்றாட பரபரப்பான வாழ்க்கையில் நாம் பலமுறை திசை மாறி போகிறோம். ஒரு திசை காட்டி எப்படி எப்போதும் வடக்கு நோக்கி திரும்புமோ அதுபோல நம் இதயத்தை மீண்டும் கடவுளை நோக்கி திருப்புவதே இந்த முதல் சூத்திரம் “என்னிடமே திரும்பி வாருங்கள்” என்ற அந்த அழைப்பை உள்வாங்குவது தான் இந்த பயணத்தின் தொடக்க புள்ளி.

### 2. மனமாற்றம்

மனமாற்றம் என்பது வெறும் குற்ற உணர்வு அல்ல. கிரேக்க மொழியில் இதை Metanoia என்பர். அதாவது நமது சிந்தனை முறையையே தலைகீழாக மாற்றுவது நம்முடைய பழைய தவறான எண்ணங்களை விட்டுவிட்டு புதிய பார்வை கொள்வதே உண்மையான மனமாற்றம்.

### 3. ஒப்புரவு

மனமாற்றம் என்பது நம் உள்ளுக்குள் நடப்பது என்றால் ஒப்புரவு என்பது வெளியில் நடப்பது நம் உறவுகளில் விழுந்த விரிசல்களை சரி செய்வது உடைந்த ஒரு பாலம் மறுபடியும் கட்டப்படுவது போல கடவுளோடும் நம் சக மனிதர்களோடும் நாம் மீண்டும் ஒரு நெருக்க உறவை ஏற்படுத்துகிறோம். மன்னிப்பு என்பது தான் இந்த பாலத்தின் அஸ்திவாரம் யாரிடம் நாம் பேச தயங்குகிறோமோ அவரிடம் பேச தொடங்குவதே இந்த சூத்திரம்.

**4. புதுப்பித்தல்**

ஒரு பழைய தூசு படிந்த கண்ணாடி வழியாக பார்த்தால் உலகம் மங்கலாக தெரியும் அந்த தூசியை துடைக்கும் போது எழும் அந்த பொலிவு தான் புதுப்பித்தல். நம்முடைய ஜெப வாழ்வையும் நற்செயல்களையும் ஒரு Software Update போல புதுப்பிக்க வேண்டும். ஒரு பழைய மரம் வசந்த காலத்தில் மீண்டும் இலைகளால் நிறைவதைப் போல நம் ஆன்மா புத்துயிர் பெறுகிறது.

**5. நீதி**

நீதி என்பது நீதிமன்றங்களில் தேடுவது மட்டுமல்ல அது நம்முடைய அன்றாட வாழ்வில் நேர்மையை கடைப்பிடிப்பது நம்முடைய சொல்லும் செயலும் ஒரு நேர்கோட்டில் இணையும் போது தான் நீதி பிறக்கிறது மற்றவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை அன்போடு செய்வதும் எளியவர்களுக்கு உதவுவதும் இந்த நீதியின் ஒரு பகுதியே.

**6. உயிர்ப்பு**

இதுதான் இந்த பயணத்தின் உச்சகட்டம் கடும் இருளுக்குப் பிறகு அடி வானத்தில் மெல்ல தோன்றும் அந்த சூரிய ஒளிதான் உயிரப்பு பழைய கசப்புகளும், பாவங்களும் இறந்து ஒரு புதிய மனிதனாக அதிக ஆற்றலோடும் அன்போடும் நாம் பிறக்கிறோம். சிலுவை பாதை என்பது கல்லறையில் முடிவது இல்லை. அது உயிர்ப்பில்தான் முடிகிறது.

இந்த ஆறு சூத்திரங்களும் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டவை. இது ஒரு ஏணி போல நம்மை ஒவ்வொரு நிலையாக மேலே உயர்த்துகிறது. இந்த தவக்காலத்தில் நாம் வெறும் நாட்களை மட்டும் எண்ணிக் கொண்டிருக்காமல் இந்த ஆறு படிகளில் நாம் எங்கே இருக்கிறோம் என்று நம்மையே கேட்டு பார்ப்போம். இந்த ஆன்மீக பயணம் உங்களை ஒரு புதிய மனிதராக மாற்றட்டும் சிந்தித்துப் பாருங்கள்

“மாற்றம் இந்த பயணத்தின் அழகான முடிவு”.



**Rev. Sr. Viyagula Mary**
Ephesus Home, Coonoor

---

தந்தை ஜான் ஆலனின் விண்ணக பிறப்பு விழாவை புனித மரியன்னை துணை மாநிலத்தின் சகோதரிகள் பிப்ரவரி 8ஆம் தேதி அன்று மறைமலை நகரில் உள்ள பள்ளியில் மிக சிறப்பாக தனிவரத்திற்கு ஏற்ப பெண் குழந்தைகளோடு பல நிகழ்சிகளை மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது.





# வரம் பொழியும் தூய வளனே வாழி!

தேனினும் இனிய தீந்தமிழ் காப்பியமாம் தேம்பாவணி, வரையிலா புகழுடை தூய வளனாரின் புகழை எடுத்துரைக்கும் ஓர் ஒப்பற்ற கிறித்துவ அருள் இலக்கியம். நம் சபையின் மூத்த அன்னையர் தூய வளனாரிடம் கொண்டிருந்த பற்று அளவிடற்கறியது என்பதை நாம் அறிவோம். வளர்க்கும் வளனார் நம் சபையின் தொடக்க காலமுதல் நம்மை வளர்த்து, வழிநடத்தி வரும் கருணை சொல்லற்கரியது. நமது இன்றைய வளர்ச்சி, வற்றாத அருள் வாழ்வு, காலத்தின் அருங்குறிகளுக்கேற்ப செயல்படும் திறன், நம் தோற்றுநர் உளப்பாங்கினை உணர்ந்து நம்மைப் புதுப்பித்துக் கொள்ளும் உன்னத போக்கு இவை அனைத்தும் தூய வளனார் வழி நாம் பெற்ற கொடைகளே எனலாம். இந்நிலையில் மூவொரு இறைவன் வழி, நம் தந்தை வளனார் பெற்ற அருங்கொடைகளை, நாம் எண்ணிப்பார்த்து, அவரது அருள் உதவியை நாடுவது நம் அக வாழ்வை புதுப்பித்தலுக்கு ஏற்றது.

தூய வளனார் மௌன மேதை, கீழ்படிதலின் உச்சம், பணிவின் ஒளிவிளக்கு, கற்பின் காவலர், இல்லற வாழ்வின் நலம் நாடிய மாண்பாளர், ஒப்பற்ற ஆசிரியர், தாழ்ச்சியின் வடிவம், பிறர் அன்பின் ஊற்று, எளிமையின் உரு, உழைப்பின் உன்னதர் என பன்முனைப் பண்பாளராய் விளங்கியதை எண்ணி வியக்கிறோம். தூய துறவி வீரமாமுனிவர், தமிழ் கூறும் நல்லுலகின் வாடா மாலையாய் உவந்தளித்த தேம்பாவணியில் முடி சூட்டு படலம் வழியாக மூவொரு இறைவன், தூய வளனாருக்கு அளித்த மாட்சியையும், மகத்துவத்தையும், அருள் வரங்களையும் உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்கிறேன்.

**தெய்வத் திருமைந்தர் இயேசுவும், தூய வளனாரும் விண்ணுலகிற்கு எழுந்தருளுதல்**

“நாம் மீட்டுக் காத்த இம்மானிட குலம் நன்மை அடையும் பொருட்டு, நீர் அரசருக்குரிய மணிமகுடம் சூடி, விண்ணக வரங்களோடு வாழும் பொருட்டு வானுலகிற்கு எழுந்தருள்க என, திருமகன் இயேசு வளர்ப்புத் தந்தை வளனாரை வேண்ட, பொன்னை ஒத்த மைந்தரின் திருவடிகளை வளன் போற்றி வணங்க, வானவர் அணியினர் வாழ்த்தி நிற்க தூய வளனும், மகனும், ஒளிவீசும் ஞாயிறும் திங்களுமாகிய இரு சுடர்கள் போன்று வானவர் அணிகளின் நடுவே பேரின்ப பெருவெள்ளம் கொண்டவர்களாய் விண்ணகம் சென்றனர். வானவரது ஒன்பது அணியினரும் விண்மீன்களென தேன் பொழியும் மலர் மாலைகளை இருவருக்கும், அணிவித்து எதிர் கொண்டழைக்க அரசருக்குரிய சிறப்புடன் அழைத்துச் செல்லப்பட்டனர்.

வான்வீட்டைந்த இறைமகன், பேரின்ப நிலையில் வீற்றிருந்த தந்தையாம் கடவுளின் அரியணையின் முன் விழுந்து, பணிந்து கீழ்காணுமாறு வேண்டினார்.

தந்தையே! நீர் எனக்களித்த கட்டளையை ஏற்று மனித குலத்தை மீட்க, மனுவுடல் எடுத்து, கொடிய சாவை ஏற்று, உம் விருப்பத்தை குறையற முடித்தேன். இதோ இவர்களை எல்லாம் மீட்டு நீர் மகிழுமாறு உம் திருவடிகளில் சேர்த்தேன். ஏற்று அருள்புரிவீராக என வேண்ட, தந்தையாம் இறைவன் அருமை மகனை கனிவாய் தழுவி அரவணைத்து, அரியணையில் அமர்த்தி, மகனே, நீர் வேண்டுவது யாதெனினும்

தடையேதும் இன்றி தந்தருள்வேன் என்றுரைத்தார். இனிய இதயமுடைய திருமகன் மைந்தன் இனிதே பகன்றதாவது, நான் மனிதவுரு எடுத்த காலங்களில் நீர், தூய வளனாருக்குத் தந்த பூங்கொடியின் நிழலிலே நான் தங்கியிருந்த சமயம், தனக்கு நிகர் யாரும் இல்லை எனும்படி தூய வளனார் என்னை பாதுகாத்து வளர்த்தார். உலகில் நிகரற்ற மனத்தூய்மையுடன் வாழ்ந்த அவர் இப்பொழுது இங்கு நிற்கிறார். 1. அரிய வரங்களைப் பெற்ற இவர் மண்ணுலகில் என் தாய் அடைந்த துயரமெல்லாம் நீக்கினார். 2. என்னை ஒழிக்க திட்டம் தீட்டிய கொடுங்கோல் அரசனின் பிடியினின்று என் உயிரைக் காத்தார். 3. நான் காணாமல் போன போது, என் பிரிவால் ஆவியே அகன்றது போல் துடித்தார். 4. நான் இன்சுவை உணவு உண்ண என் பொருட்டு யாசித்தார். நெஞ்சம் வருந்தி உடல் வியக்கும் அளவு உழைத்தார். அத்தகைய இவர் கருணையில் கரை கடந்தவர்.

அனைத்தையும் அறிந்த நல்லவராகிய தந்தையே! என்னையும் என்னைப் பெற்றெடுத்த மரியாவையும் காத்திட்ட வளனாரின் தகைமையை குறித்து நான் கூற வேண்டியது ஏதுமில்லை. இத்தகைய என் வளர்ப்புத் தந்தை தம் உடலோடு கூட என்னுடன் வான்வீட்டிற்கு வந்துள்ளார்.

ஆதிப் பெற்றோர் புரிந்த பாவப் பழி நீங்க, நான் செங்குருதி சிந்தியதால் விளைந்த பயனே இது என்பதனை காட்டும் வண்ணம், என் வளர்ப்புத் தந்தையாம் இவரே, விண்ணுலக மன்னர் என ஒளிவீசும் மணிமுடியை இவருக்கு நீர் சூட்டுதல் வேண்டும் எனக் கூறி பணிந்தார். தந்தையாம் இறைவர் தம்மை வணங்கி நின்ற வளனாருக்கு, ஆசி வழங்கி "இங்கெழுந்தருள்க" என அரியணையில் அமர்த்தினார். கதிரவன் போல் ஒளிரும் மணிமகுடத்தில் வேறு ஏழு விண்மீன்கள் பதித்தாற்போல் ஒளிரும் மணிமுடியை மலர்க்கொடி ஏந்திய வளனின் தலைமீது தந்தையாம் இறைவன் அணிவித்தார். அப்பொழுது விண்ணவர் எழுப்பிய ஆரவாரத்தோடு, தெய்வீக வீணையின் இன்னொலியும் துதிப்பாடல்களும் எம்மருங்கும் முழங்கின. இம் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே திருமகன் ஒளி மிகுந்த மகுடத்தை தம் வளர்ப்பு தந்தைக்கு சூட்டினார். எங்கும் பல்லாண்டு ஒலிக்க மகிழ்ச்சிப் பெருக்கெடுத்த நிலையில், தூய வளனார் கையில் ஏந்தியிருந்த மலர்க்கொடியில் அச்சமயம் மூவாயிரத்து அறுநூற்று பதினைந்து தேனிறை மலர்கள் மலர்ந்தன. அம்மலர்களைக் கொண்டு வானவர் தொடுத்த முப்பத்தி ஆறு மாலைகளை இறைவனின் குளிர்ச்சி நிறைந்த பாதங்களில் சூட்டினர்.

அந்நேரத்தில், மூவொரு இறைவனுள் ஒருவராம் தூய ஆவியாரும் பெருந்தவத்தோனாகிய வளனுக்கு, ஒளிரும் முடியை அணிவித்தார். தந்தையாம் இறைவனோ, திருமகனின் இருக்கையின் அருகே அலங்கரிக்கப்பட்ட ஆசனத்தில் வளனாரை அமரச் செய்து பின்வருமாறு திருவாய் மலர்ந்தார். "தாவீது அரசருக்கு வாக்களித்தபடியே உமக்கு அரசுரிமை தந்துள்ளேன். உமது மணிமுடியில் பதிக்கப்பெற்றுள்ள ஏழு மணிகள், அன்புடன் நான் உமக்கு அளிக்கவிருக்கும் ஏழு வரங்களைக் குறிப்பனவாகும்."

**முதலாவது: கற்பு வரம்**

தூய மனம் கொண்டவரே! நீர் மரியாவின் கன்னித் தன்மையை காத்ததோடல்லாமல், உம் ஒழுக்கத்தையும் குறையற காத்துள்ளீர். மனத்தை வருத்தும் காம நோயைத் தீர்த்து, உயரிய கற்பினை காப்பதற்கான மனத்திடனை

மக்களுக்கு வழங்க, கற்பு நலம் பேணும் வரத்தினை அளிப்பதின் அடையாளமாக முதல் மணியினை உமக்குத் தந்தேன்.

**இரண்டாவது: தீவினை நீக்கும் வரம்.**

பெருந்தவத்தோனே! தவம் என்னும் வேலியை அரணாகக் கொண்டு ஐம்புலன்களை வென்று, தூய்மையின் சுடர் விளக்காய் நீர் துலங்கியதால், மக்களை தீவினை நெருங்காது காக்கவும், வந்த தீமையை உணர்ந்து ஒழிக்கவும் உறுதுணையாக இருக்க, தீமைகளை நீக்கும் வரத்தினை உமக்கு அளிப்பதின் அடையாளமாக இவ்விரண்டாம் மணி அமையும்.

**மூன்றாவது: மரியாவின் அன்பை பெறுவதற்கான தொடர்பாளராய் விளங்கும் வரம்.**

கடலளவு இரக்கம் கொண்டவரே! அன்னை மரியாவை அரிய முறையில் பேணிக் காத்ததால் அத்தாயின் அன்பையும் அருளையும், பெற்றுத்தரக்கூடிய ஒப்பற்ற அருட் தொடர்பாளராக நீர் இருப்பீராக, என்ற வரத்தை அளித்ததற்கு அடையாளமாக இம் மூன்றாம் மணி அமைவதாக.

**நான்காவது: பேய்களை வெல்லும் வரம்.**

வஞ்சனை நிறைந்த பேய்களை வெற்றிக் கொண்டவரே! உம் திருப்பெயரை உச்சரித்த அளவில் பேய்கள் அஞ்சி ஓடும் அரிய வரத்தை தந்துள்ளோம் என்பதை பொன்னில் பதித்த நான்காம் மணி குறித்துக் காட்டும்.

**ஐந்தாவது: குழந்தை பேறு வரம்.**

மலர்க்கொடி ஏந்தும் நல்லோய்! இறைவனின் அருட்சிறப்பால், உம் உதவியின்றியே கன்னிமரி திருமகனை பெற்றெடுத்தாள் எனினும், உம் குழந்தையைப் போன்றே நீர் விரும்பி வளர்த்தீர். எனவே குழந்தை பேறு இன்றி வருந்தி, உம் துணை நாடி வந்தோருக்கு நல்லதோர் சந்ததியை உருவாக்கும் அடையாளமாக இந்த ஐந்தாம் மணி அமைவதாக.

**ஆறாவது: நோய் தீர்க்கும் வரம்.**

நீடிந்த பொறுமையால் அரசுரிமைப் பெற்றவரே! கடின உழைப்பால் எண்ணற்ற நோய்களை ஏற்று நீர் துன்புற்றீர், எனினும் வைரமணி குன்றைப் போன்று வறுமையில் நிலைபெற்று விளங்கினீர், நோயால் துன்புற்று வருந்தி, நலம் வேண்டி உம்மை நாடிவருவோருக்கு அவர்தம் உள்ளம் குளிரும் படி, நீரே மருந்தாக இருந்து குணப்படுத்தும் வரத்தை அளித்ததற்கு அடையாளமாக இந்த ஆறாவது மணி அமையும்.

**ஏழாவது : இறப்போருக்கு துணையாகும் வரம். (நன்மரணம் அருளும் வரம்)**

வானவரும் வணங்கி தொழும் உயரிய குணம் உடையவரே! உம் வாழ்வின் இறுதி வேளையில் உம் உடலை விட்டு உயிர் பிரியும் நேரத்தில் அன்னை மரியும், திருமகன் இயேசுவும் இருபுறமும் உம்மைத் தாங்கி, உம் துயரத்தை ஆற்றும் வகையில் தம் அருளைப் பொழிந்த வண்ணம் நிற்க, தீயினால் வாடிய தளிர் போன்ற உடலை விட்டு உயிர் பிரியும் வேளையில், திருமகன் உரைத்த செய்தியை தூதாக சென்று உரைத்தீர் என்பதால், மக்கள் நோயுற்று இறக்கும் வேளையில், நீர் அவர்களுக்கு துணையாய் இருந்து தேற்றும் வரத்தின் அடையாளமாக இந்த ஏழாம் மணி அமையும். உம்

திருமகன் மீட்ட மக்களை வான் வீடாம் விண்ணக பேரின்பத்தில் சேர்த்து அரசாளும் பொருட்டு, நான் இன்று உமக்கு வழங்கிய வரங்களை நீர் அனைவருக்கும் பகிர்ந்தளிப்பீராக என யாவருக்கும் முதலோனாகிய தந்தையாம் கடவுள் ஆசி அளித்தார்.

**இறை திருமகனின் ஆசி:**

இறை மைந்தனாம் இயேசுவும் தூய வளனாரை வணங்கி, கரையற்ற கருணையோடு இம் மண்ணுலகில் வாழ்ந்த காலமெல்லாம் உம் சொற்படி நடந்தேன். இம் மானிட உயிர்களுக்கு இரங்கி இவர் பொருட்டு நீர் என்னிடம் கேட்கும் அனைத்தையும் தருவேன். உம் பரிந்துரைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என மொழிந்தார்.

**தூய ஆவியாரின் ஆசி:**

விண்ணுலக தெய்வீக அன்பாகத் திகழும் மூவொரு இறையுள் ஒருவராய் விளங்கும் தூய ஆவியாரும் வளனாரை நோக்கி, மரியாவின் திருமண நாளில் மலர்க்கொடி உமக்குத் தந்தேன். உம் அடைக்கலம் நாடி வந்தோர் அனைவரும் இம் மலர்க்கொடியின் நிழலில் உயர்வடைய கருணை புரிவேன் என்று கூறி தம் ஆசீரைப் பொழிந்தார். இறைவனிடமிருந்து பெற்ற ஆசிகளால் உளம் மகிழ்ந்த, தூய வளனார் எளியோனை பெருமையுறச் செய்த உமக்கே புகழ் அனைத்தும் உரியது எனக்கூறி பணிந்து மகிழ்ந்தார்.

**தூய வளனாரால் விளைந்த நன்மைகள்:-**

இவ்வாறு, வளனார் அடைந்த மாட்சியாலும், பெற்ற வரங்களாலும், நினைத்தற்குரிய முறையில் அவர் பலருக்கும் இரக்கம் காட்டியதால், வான்வீடு ஏகுவோரின் அளவு எடுத்துரைக்க இயலாததாயிற்று. வளனார் இரக்கம் காட்டுவதில் தாயை ஒத்தவராகி, நீங்கா நோயுற்றோருக்கு அருமருந்தாகி, அலகை தாக்கும் பொழுதில் அரணாகி, வானுலகடையும் வரை நீங்கா துணையாகி, அருட் பார்வையால் அலகையை அழித்தொழிப்பவராகி,மனம் கலங்குவோரின் ஆறுதலாகி, வற்றாது அருள் சுரக்கும் வளனாரின் கொடைத் திறனால் பல்வேறு நன்மைகள் எண்திசை மக்களும் பெற்று மகிழ, விண்ணுலக மாட்சியுடன் விளங்கினார் என வீரமாமுனிவர் கூற்றால் அறிகிறோம்.

மூவொரு இறைவனால், தூய வளனார் பெற்ற இறை ஆற்றல் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. அன்றாட வாழ்வில் அவரின் அருள் உதவிகளைப் பெற்று மகிழும் நாம், அவரின் அருள் ஆற்றலில் நம்பிக்கை கொண்டவர்களாய் அவரது உதவியை நாடுவோம். தூய வளனாரின் அரவணைப்பில் ஒப்படைக்கப்பட்ட நம் சபையின் வளர்ச்சிக்காய், உடனடி தேவைகளுக்காய், இறை அழைத்தலுக்காய், நம் நிறுவுனர் தந்தை ஜான் ஆலன் அவர்களை, புனித நிலைக்கு உயர்த்த மேற்கொள்ளும் அரிய முயற்சிகள் அனைத்தும் நிறைவு பெற உருக்கமாய் மன்றாடுவோம். தூய வளனாரின் பாதுகாப்பில் நம்மை முழுமையாய் ஒப்படைத்து அவருக்கு ஏற்றவர்களாய் வாழ தொடர்ந்து முயல்வோம்.



**Rev. Sr. Baby Victoria**
St. Joseph's Convent, Vepery

# சகோதரி. ரோசாலி அவர்களின் விண்ணகப் பயணம்

பிறப்பு: 01.10.1945



இறப்பு: 21.02.2026

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் நம்பிக்கை கொள்வோர் இறப்பினும் வாழ்வார்."

நம் சகோதரி. ரோசாலி அவர்கள் சத்தியமங்கலம் என்னும் சிற்றூரில் 01.10.1945ஆம் ஆண்டு திரு. மைக்கேல் – திருமதி. சவரியம்மாள் இவர்களுக்குப் பிறந்த ஆறு மக்களுள் முதலாவதாக பிறந்தவர். பெற்றோர் உடன் பிறந்தவர்களின் அன்பிலும் பாசத்திலும் வளர்ந்து பள்ளிக் கல்வியை முடித்து, ஆசிரியர் பணியையும் செய்து கொண்டிருந்த வேளையில் இறைவனால் நமது FSJ சபைக்கு 1973 ஆம் ஆண்டு அழைக்கப்பட்டவர். 1976 இல் தமது முதல் அர்ப்பணத்தையும், 1982ல் தமது இறுதி அர்ப்பணத்தையும், 2001இல் தமது வெள்ளி விழாவையும், 14.2.2026 அன்று தமது பொன் விழாவையும் கொண்டாடினார்கள். சபை தமக்குத் தந்த பணித்தளங்களான வேப்பேரி, காரையூர், லூயிஸ் இல்லம், மானாம்பதி கண்டிகை, திருவெற்றியூர், அம்சி, ஸ்ரீகாளகாஸ்தி, நேதாஜி நகர், செய்யார், பிருதூர் என பல்வேறு இடங்களில் ஆசிரியர் பணியையும், இல்ல பொறுப்பாளர் பணியையும் குழந்தைகள் காப்பக பராமரிப்பு பணியையும், சிறப்பாக செய்தவர்கள். இவர் கோவாவில் உருவாக்க பயிற்சி பெற்று எட்டு ஆண்டுகள் நவக்கன்னியர் பயிற்சியாளராக பணிபுரிந்து இளம் துறவிகளை உருவாக்கியவர்கள். இவரிடம் விளங்கிய அர்ப்பணம் மற்றும் அறிவு திறனால் 6 ஆண்டுகள் சபை ஆலோசகராகவும், நான்கு ஆண்டுகள் சபை செயலராகவும் சிறப்பாக பணியாற்றியவர்கள்.

இறுதியில் வந்தவாசி இல்லத்தில் நற்செய்தி பணி செய்து வந்தார்கள். உடல்நல குறைவு காரணமாக நமது புனித தோமையார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் 21.02.2026 அன்று அதிகாலை இறைவன் இவரை தம்மோடு இருக்க அழைத்துக் கொண்டார்.

செபத்திலும் தியாகத்திலும் உறுதியாய் இருந்து இறைப்பணி செய்து இருக்கிறார்கள். தனது துறவர வாழ்வில் அன்பின் சாட்சியாக அர்ப்பணிப்பு வாழ்வின் ஒளியாக இளம் துறவிகளுக்கு வழிகாட்டி இருக்கிறார்கள்.

தனது குழும வாழ்வில் தனது நடனத்தின் மூலம் சகோதரிகளின் முகத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியும் வாழ்ந்தவர். தனது கல்விப் பணி மூலம் எண்ணற்ற குழந்தைகளுக்கு அறிவை வழங்கியதோடு நற்பண்புகளையும் நல்ஒழுக்கத்தையும் கற்பித்து இருக்கின்றார்கள். ஏழைகளுக்கு இரங்குகிறவன் கடவுளுக்கு கடன் கொடுக்கிறான் என்று இறை வசனம் கூறுவது போல ஏழைகள் மட்டில் இரக்கம் காட்டி அன்பு செலுத்துபவர் நிரந்தர அன்பை பற்றிக்கொள்ள இறைவனில் இணைந்த சகோதரி. ரோசாலி அவர்கள் என்றும் பேரின்ப வீட்டில் நிலையாய் வாழ்ந்திட அவரின் ஆன்மாவுக்காக செபிப்போம்.

## இந்தியாவுக்கான அழைப்பு

1875–இல் சென்னை மாவட்ட ஆயர் ஸ்டீபன் ஃபென்னெல்லி (Bishop Stephen Fennelly, Vicar Apostolic of Madras) தமது மாவட்டத்திற்குப் பணி புரியக் குருக்களை அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கையுடன் இலண்டனில் உள்ள மில்ஹில்லுக்கு வந்தார். சென்னைக்கு அழைக்கப்பட்ட குருக்கள் அம் மறைவட்டத்தின் வடக்குப் பகுதியில் உள்ள தெலுங்கு மொழி பேசும் மக்களின் மத்தியில் பணி அமர்த்தப்பட இருந்தனர். அமெரிக்காவில் பணியாற்றியது போன்றில்லாமல் முற்றிலுமாகக் கிறித்தவரல்லாத மக்களிடம் பணிபுரிவது என்பது தந்தை வோனுக்கு மகிழ்ச்சியையே அளித்தது. மறைத்தூதுப் பணியாளர்களது முதன்மை நோக்கத்திற்கு இது முற்றிலும் பொருத்தமானதாக அமைந்திருந்தது." எனவே இந்த அழைப்பை மனம் உவந்து ஏற்றுக் கொண்டார்.

1875–இல் நவம்பர் மாதம் 2ஆம் நாள் நான்கு மறைத் தூதுப் பணியாளர்கள் இலண்டனில் இருந்து இந்தியாவை நோக்கிக் கடற்பயணத்தை மேற்கொண்டார்கள். இவர்களே சென்னையின் வடக்குப் பகுதியில் உள்ள தெலுங்கு பேசும் மக்களிடம் அனுப்பப்பட்ட முதல் மறைத் தூதுப் பணியாளர்கள் ஆவர். ஒரு வருட காலம் அம் மக்களுடனேயே தங்கிப் பணியாற்றி மொழியையும், அவர்களது கலாச்சாரத்தையும், பழக்க வழக்கங்களையும் புரிந்து கொண்டு இறை வார்த்தையை அவர்கள் மத்தியில் கொண்டு சென்றதோடு மட்டுமன்றிப் பலரையும் இயேசு கிறிஸ்துவை அறிந்து ஏற்றுக் கொள்ளச் செய்த நற்பணியில் இவர்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். பருவ நிலை மாற்றங்கள், உணவுப் பழக்க வழக்கங்கள், கொசுத் தொல்லைகள் அதனால் ஏற்பட்ட தொற்று நோய்கள், கடுமையான வெப்பம், போதிய இட வசதியின்மை போன்ற இவை எதனையும் பொருட்படுத்தாமல் முன் வைத்த காலைப் பின் வைக்காமல் பணியாற்றி மக்களது அன்பையும் ஆதரவையும் பெற்றிருந்தனர். ஒவ்வொருவரும் தங்களுடைய அனுபவங்களை மறவாது தங்களது சபைத் தலைவருக்குக் கடிதத்தின் வாயிலாகத் தெரிவித்தும் வந்தனர்.

1877 ஜனவரி 28–ஆம் நாள் இரண்டாவது குழு தென்னிந்தியா நோக்கிப் பயணித்தது இவர்களும் தெலுங்கரிடை பணியாற்றவே அனுப்பப்பட்டனர். இம்முறையும் நால்வர் வந்தனர். இவர்களுள் ஒருவர் மில்ஹில் சபையைச் சார்ந்த ஹாலந்து நாட்டினரான அருள் தந்தை அந்தோணி க்ரூட் என்பவரும் இருந்தார். பிரங்கிபுரத்தில் மிக அருமையான தேவாலயத்தைக் கட்டி இன்றளவும் அம்மக்கள் அவரை நினைந்து போற்றுமளவு அவரது பணி அங்கு மிகச் சிறப்பாக அமைந்திருந்ததைக் காண்கின்றோம்.

**2.4 தென்னிந்தியா**

பன்னீராயிரம் ஆண்டு இலக்கிய வரலாறு பெற்றது தமிழ் மொழி என்பது இறையனார் களவியல் உரை கூறும் செய்தி. நில நடுக்கோட்டுக்கு வடக்கே இலரோசியாவும் தெற்கே கோண்டுவானாவும் அமைந்திருந்தன என்பர் அறிஞர் பெருமக்கள். நான்காவது கடல் கோளுக்குப் பிறகு கோண்டுவானாவில் எஞ்சிய பகுதியே இலெமூரியா என்பார் சுகாத்து எலியட்ஸ். மனித இனத்தின் தொட்டிலாகத் திகழ்ந்ததே இந்த இலெமூரியாதான் என்கின்றார் அறிஞர் எக்காலோ. இங்கு வாழ்ந்த மக்களே கடற்கோளின் போது ஆப்ரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் சிதறினர் என்ற செய்தி அகழாய்வுகளால் புலனாகின்றது. சிந்துவெளி நாகரீகம் என்பது தமிழ் நாகரீகமே என்பதைப் பின்லாந்துப் பேரறிஞர் அசுகோ போரபோலோ நிறுவியுள்ளார். இந்தியாவின் தென் பகுதியில் அமைந்துள்ள இந்நாட்டினர் பேசும் தமிழென்கின்ற மொழியே உலகின் முதல் மொழி என்கின்றார் இராமசந்திர தீட்சிதர்.?

இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ் மக்கள் அறவழியிலும், ஆன்மீக வழியிலும் தங்களை நிலை நிறுத்திக் கொண்டவர்கள். அற நூல்களையே தங்களது இலக்கியமாகப் பெற்றவர்கள். அறம் என்றால் என்ன? விலக்கியன ஒழித்து விதித்தன செய்தலே அறமாகும். இயற்கையில் பொதிந்துள்ள அறவாழ்வுக்கான செய்திகளைத் தமது கூர்த்த அறிவால் கண்டுணர்ந்த பெரியவர்கள் இந்த அறங்களை இலக்கியமாக வகுத்துத் தந்துள்ளனர்.

உயிரினங்கள் முதன் முதலில் நீரில்தான் உருவாகின. கிறித்தவர்களது வேத நூலான பைபிளின் முதல் நூலான ஆதியாகமமும் உலகம் நீரால் நிரம்பியிருந்ததைத்தான் முதலில் விவரிக்கின்றது. வேற்றுக் கிரகங்களில் உயிரினம் உண்டா என்பதை அறிய முற்படுபவர்கள் உயிர்கள் உருவாவதற்கும் வாழ்வதற்கும் ஏற்ப அங்கு நீர் நிலைகள் இருந்ததற்கான அறிகுறி ஏதேனும் உண்டா? என்றுதான் ஆராய்ச்சி மேற்கொள்ளுகின்றனர். எனவே நீர்தான் உயிரினங்களின் தோற்றத்திற்கான ஆதாரம் என்பதை அறியமுடிகின்றது. அவ்வாறு தோன்றிய உயிரினங்களில் கடைசி உயிரினமான ஆறறிவு கொண்ட மனிதனும் நீர் நிலைகளுக்கு அருகாமையில்தான் தனது வாழ்க்கையைத் தொடங்கினான்.



**Rev. Sr. Margaret Bastin**
St. Louis Convent



*congratulations*

*Dear Rev. Sr. Lumina Traffita,*
*we assure you of our prayers as you begin your new mission.*
*Wishing you all the very best.*

# Happy Birthday Sisters

May the light of heaven shine
upon you and bring peace to your heart.
May the love of God be with you always and forever.

## MARCH

2026

| | |
|---|---|
| 1st | Sr. Kala |
| 03rd | Sr. G. Maria Velankanni |
| 04th | Sr. Angeline Arockiasamy |
| | Sr. Jeya Antony |
| | Sr. Monita Digal |
| 06th | Sr. Allelluia Christanandhi |
| 07th | Sr. Emila Fernando |
| 09th | Sr. Mercia Maria |
| | Sr. Sujatha Baliar Singh |
| 10th | Sr. Pauline Daisy |
| | Sr. G. Stella Mary |
| | Sr. Y. Amala Rani |
| 11th | Sr. Evangelin .R |
| 12th | Sr. Viyakula Mary |
| | Sr. Gnana Marie |
| | Sr. Melcy Mary |
| | Sr. Daisy Jacob |
| | Sr. Margaret Jecintha |
| 14th | Sr. Josephine Nirmala Rani |
| | Sr. Josephine .M |
| 15th | Sr. Mary Cornelia |
| | Sr. Avila Theresa Mary |
| | Sr. Maria Celine.M |
| | Sr. Regina Mary .V |
| | Sr. Beauty Digal |
| 16th | Sr. Florence Secily |
| | Sr. Mary Stella .S |
| | Sr. Princy |
| 17th | Sr. Tamilarasi |
| 19th | Sr. Bridget Mary |
| 20th | Sr. Mary Dennis |
| | Sr. Arul Mary .P |
| | Sr. Kalai Selvi |
| 21st | Sr. Roseline Jeya Rani |
| 22nd | Sr. Helen Paulinal |
| 23rd | Sr. Maria Velankanni |
| 25th | Sr. Saleth Mary Rayappan |
| | Sr. Priya Dharshini |
| 26th | Sr. Roseline .I |
| 28th | Rev. Mother .M. Arockiam (Superior General) |
| 29th | Sr. Mary Joseline |
| | Sr. Fathima Rathinam |
| 30th | Sr. Sophia Gasper |
| 31st | Sr. Arockia Sobia |




*Be happy & Stay blessed*

# Beloved Sisters...



# Departed in Christ....



| | |
|---|---|
| Sr. Mary Berchmans | 01.03.1951 |
| Sr. Sebastine | 04.03.2024 |
| Sr. Mary Paula | 06.03.2016 |
| Sr. Mary Stanislaus (S.G.VI) | 10.03.1926 |
| Sr. Mary Clotilda | 12.03.2019 |
| Sr. Mary Anasthacia | 15.03.1985 |
| Sr. Mary Gertruda | 15.03.1995 |
| Sr. Mary Seraphia | 16.03.1991 |
| Sr. Mary Lucia | 22.03.1974 |
| Sr. Mary Leo | 23.03.2023 |
| Sr. Mary Divine Heart | 25.03.1984 |
| Sr. Mary Perpetua | 29.03.2003 |

*May their souls Rest in Peace*



# சமூக தொடர்பு பணிக்குழு

## வேண்டுகோள்!



"**உறவே நீ பேசு**" என்ற மாத இதழ் வெற்றிகரமாக 80 இதழ்களை தந்திருக்கின்றது. உங்கள் அனைவரின் மேலான ஒத்துழைப்புக்கு நன்றியும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்து நம் சபையின் இந்த இதழ் சிறப்புற அமையவும், மேலும் பல செய்திகளைத் தாங்கிவர - மாநில வாரியாக ஒவ்வொரு பணிக்குழுவின் திட்டவரையறைகள், செயல்பாடுகள் மற்றும் அறிவிப்புக்கள், பாராட்டுகள், புத்தகம் மற்றும் பாடல் வெளியீடுகள், பணி ஓய்வு விழா, மாநிலத்தலைவிகளின் மாதாந்திரப் பயணத்திட்டங்கள் அடங்கிய தொகுப்புகள் இவற்றை ஒவ்வொரு மாதமும் 20-ம் தேதிக்குள் அனுப்பித்தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். மற்றும் முக்கியமான நிகழ்வுகளின் புகைப்படங்கள் அனுப்பும்போது JPEG Format-ல் அனுப்பவும்.

**தூய யோசேப்பின் பெருவிழா**
**மற்றும் பெண்கள் தின விழா நல்வாழ்த்துக்கள்**

**குறிப்பு:**

*உங்கள் பகிர்வுகள் மற்றும் பணிக்குழுக்களின் செயல்பாடுகளை கீழ்காணும் மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

**Email: communicationfsj2022@gmail.com**



**Rev. Dr. Sr. Mary Jenova fsj**
*General Councilor*
*Communication Commission*



VOCATION, FORMATION & EVANGELISATION COMMISSION


EDUCATION COMMISSION





HEALTH & COMMUNICATION COMMISSION

SOCIAL WORK, WOMEN'S AND FEMALE CHILDREN & PROJECT COMMISSION





FINANCE & LEGAL COMMISSION







# Happy Birthday

**Rev. Mother. M. AROCKIAM**

*Superior General of*
*FSJ Congregation.*

*"Le auguriamo di raggiungere*
*I cent'anni nella luce del Signore."*

*28th March*







